தொகுதி- ருகூ :: பகுதி- க௦-கக Vol. 59 :: No. 10-11

செந்தமிழ்

திருவள்ளுவர்
ஆண்டு 1994
சோபகிருது—தை-மாசி
JAN & FEB—1964

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

(வெளியிட்ட நாள் 21—7—64)

உள்ளுறை

1. தமிழர் வளர்த்த சிற்பக்கலை 225
அ. திருமலைமுத்துசுவாமி
2. அன்பை மிஞ்சிய கடமை 239
'மதுரைக் குமரன்'
3. தமிழன் 243
'பார்வேந்தன்'
4. மதுரைக் காண்டமும் மன்னவன் சிறப்பும் 244
மு. உலகநாதன்
5. தமிழர் வரலாற்றில் சொக்கலிங்கபுரம் 247
கா. மாரன்
6. தமிழில் பிறமொழிச் சொற்கள் 254
கோவை வாணன்
7. துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள் 261
ஆ. சிவலிங்கனார்
8. மதிப்புரை 272
பொறுப்பாசிரியர்

"செந்தமிழ்"

நிர்வாக ஆசிரியர்

தமிழவேள்

திரு. பி. டி. இராசன் B. A.(Oxon), Bar-at-law

உ
கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி ருகூ Vol. 59	திருவள்ளுவர் ஆண்டு 1994 சோபகிருது — தை, மாசி 1964 January, February	பகுதி 10, 11 No. 10, 11

தமிழர் வளர்த்த சிற்பக்கலை

அ. திருமலைமுத்துசுவாமி, M. A., B. T., M. Litt., D. Lib. Sc.

[217-ஆம் பக்கத் தொடர்ச்சி]

மகேந்திரன் காலத்திலே கட்டப்பட்ட கோவில் தூண்களில் சதுரங்களிலே தாமரை மலர்களும், பலவகை வட்டங்களும் செதுக்கப்பட்டுள்ளன. நரசிம்மன் அமைத்த தூண்களின் அடியிலே சிங்கம் அமைக்கப்பட்டிருக்கும். இராசசிம்மன் செதுக்கிய தூண்களின் அடியிலே உள்ள சிங்கம் நின்ற நிலையிலே காட்சி அளிக்கிறது. தளவானூர்க் கோவிலில் உள்ள தூண்களிலே 'இரட்டைத் திருவாசி' செதுக்கப்பட்ட சிற்பம் நன்றாக இருக்கிறது. தூண்கள் மீது செதுக்கப்பட்ட ஒருவகைத் தோரணமே இரட்டைத் திருவாசி என்பதாகும். அஃது இருபக்கங்களிலும் உள்ள மகரமீன்களின் வாயிலிருந்து கிளம்பி நடுவில் உள்ள ஒரு சிறிய மேடையில் கலக்கின்றது. அம்மேடைமீது சிறிய இசைவாணர் (கந்தருவர்) இருக்கின்றனர்; மகர மீன்களின் கழுத்துமீதும் இசைவாணர் இருக்கின்றனர். இச் சிற்பம் பார்க்கத் தக்கது.

உருவச் சிற்பங்கள்

மகேந்திரன் அமைத்த கோவில்களில் உள்ள வாயிற் காவலர் உருவங்கள் சிற்பக்கலையழகு பொருந்தியன. ஒவ்வொரு கோவிலிலும் வெவ்வேறு கோணத்தில் இக்காவலர் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன, சில கோவிற்காவலர் உருவங்களின் தலையில் இரு கொம்புகள் காணப்படும். கைகளில் தடிகள் காணப்படும். மாமல்லைக் கொடிக்கால்-துர்க்கைக்கோவில் - மண்டபவாயிற் காவலர் பெண்டிர் வல்லம் கோவிலில் உள்ள சேஷ்டாதேவியின் சிலையும், பிள்ளையார் சிலையும் பார்க்கத்தக்கன. மண்டபப் பட்டுக்கோவிற் காவலர் தடிகளிலே பாம்பு சுற்றிக்கொண்குருப்பதாகச் செதுக்கப் பட்டுளது. நாமக்கல் மலைக்கோவில் (அரங்கநாதன் மலைக்கோவில்) உள்ள பள்ளிகொண்டபெருமாளின் சிற்பம் போன்ற வேலைப்பாடு உலகில் எங்குமே இல்லை என்னலாம். முன் மண்டப மூங்கில் தாழ்வாரத்தில் சிற்பத் திறனை உணர்தலோ - உணர்த்தலோ எழுத்தில் அரிது; சித்தன்னவாசலில் உள்ள குகைக் கோவிலில் காணப்படும் தீர்த்தங்கரர் உருவச்சிலைகள் கலையழகு மிக்கவை. மற்றும் ஆதிவராகர் கோவிலில் உள்ள மகேந்திரன், அவன் இரு மனைவியர்; சிம்மவிட்டுணு அவன் இரு மனைவியர் ஆகியோரின் சிற்பங்கள் பார்க்கத் தக்கன.

பாறைச் சிற்பங்கள்

மகேந்திரன் அமைத்த கோவிற்சுவர்களிலே புராணக் கதைகளை விளக்கும் சிற்பங்கள் செதுக்கப்பட்டிருக்கும். திருச்சி மலையிலே மகேந்திரன் ஒரு குடைவகைக் கோவிலை அமைத்துள்ளான். அக்கோவிலில் மேற்புறச் சுவரிலே கண்ணைக்கவரும் பதுமைகள் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் நடுவிலேநிற்கும் கங்காதரனது பதுமை காணக் காண சுவை பெருகும். அவன் அடியிலே முயலகன் சிலை

யும், சுற்றியுள்ள அடியார் சிலையும், மேலே பறக்கும் இரு யாழோர், ஒரு சிறிய மனிதன் ஆகியோர் சிலையும் கண்டு வியவாத அறிஞர் இலர். நாமக்கல் மலைக்கோவிற் சுவர் களிலே தசாவதாரக் கதை நன்கு செதுக்கப்பட்டுள்ளது.

நரசிம்மன் காலத்துச் சிற்பக்கலையின் செழிப்பையும் சீரையும் மாமல்லபுரப் பஞ்சபாண்டவர் ரதங்களிலே காணலாம். மற்றும் திருச்சியிலும், வெள்ளறையிலும் அவன் காலத்துச் சிற்பங்களைக் காணலாம். என்றாலும் குறிப்பிடத்தக்க பெருஞ்சிறப்பை உடைய சிற்பங்கள் மாமல்லபுரத்தில் உள்ளவையே. அவையெலாம் பாறைச் சிற்பங்களாகும். கங்கைக் காட்சி, கோவர்த்தன மலைக் காட்சி என்பவை கண்ணையும் கருத்தையும் ஈர்க்கவல்லவை யாம்.

மாமல்லபுரத்துச் சிற்பங்கள் ஏறத்தாழ 1200 ஆண்டு களுக்கு முன்னால் செதுக்கப்பட்டவை. அத்தனை ஆண்டு களாக அடித்த வெயிலாலும், கொட்டிய மழையாலும், வீசிய உப்புக்காற்றாலும்தேய்ந்து ஓரளவுக்கு உருக்குலைந்து போய் நிற்கும் சிற்பங்களையே இன்று நாம் கண்டு வியக் கிறோம். காலத்தையுங்கடந்து உயிர்க்களையுடன் இந்தச் சிற்பங்கள் நிற்கின்றன. இவ்வளவு காலஞ் சென்றபின்ன ரும் அருமையாகத் தோன்றும் இவை, தொடக்கத்தில் எப்படி இருந்திருக்கும்?

மாமல்லபுரத்துக்குப் போன உடனே நம் கண்ணில் படுவது மூன்று குரங்குகளின் சிற்பமே. அவற்றுள் ஒன்று கடுவன் (ஆண்), ஒன்று மந்தி, ஒன்று குட்டி. குட்டியைத் தாய்க்குரங்கு மடியில் போட்டுக்கொண்டிருக்கிறது. பெண் குரங்கின் பின் உட்கார்ந்துகொண்டு அதன் தலையில் ஈறுடன் பேன் எடுக்கிறது ஆண்குரங்கு. தூரத்திலிருந்து

பார்க்கும்போது இவை உண்மையான குரங்குகளோஎன்ற ஐயம் உண்டாகிவிடுகிறது. அருகில் போய்ப் பார்த்தாலோ இவற்றின் கண்ணோ காதோ தென்படவில்லை. இவற்றின் புதுமையும் புலப்படவில்லை. ஆனால் மீண்டும் 15 அடி நகர்ந்து பார்த்தால், உயிர்க்களை சொட்டும் பழைய தோற்றம் தெரிகிறது.

இதை அடுத்து 30 அடி உயரமும், 100 அடி நீளமும் உள்ள பாறையொன்று உண்டு. அப்பாறையின் கண்ணே சிற்பங்கள் – பலவகைச் சிற்பங்கள் பொதுளி உள்ளன. அவை அத்தனையும் சேர்ந்து நாம் காண்பது பாறை என்பதையே மறக்கச் செய்கின்றன. இங்குள்ள சிற்பத்தை ஒரு சிலர் 'அர்ச்சுனன் தவம்' என்பர். பேராசிரியர் ஈராசடிகள் இக்காட்சி மாபாரதம் - உத்தியோக பருவத்தில் உள்ளதைக் குறிப்பதேஆகும் என்பர். ஆனால், இக்காட்சி சமணர் தொடர்புடையது என்பர் அறிஞர் சீனி வேங்கடசாமி.

நுரைத்தெழுந்து செல்லும் ஆறு; ஆற்றின் மேற்புறக் கரையில் குளிக்க இருக்கும் சோடி அன்னங்கள், நீராடும் நாகர்கள், அவர்கட்கருகிலே நீர்க்குடம் கொண்டு செல்லும் பார்ப்பனன், வேறொருபால், நீரருந்த வரும் மானி, கூப்பிய கரங்களுடன் காட்சி நல்கும் தேவர், மக்கள், நாகர், பெருமாள் கோவில், அதனைச் சுற்றிலும் முனிவர்கள், அவர்களைப் பார்த்து முன்னங்கால்களைத் தூக்கிக் கண்ணைச் சற்றே மூடி நிற்கும் பூனை, அதனைத் தொழும் எலிக்கூட்டம் இத்தனையையும் கொண்டதே கங்கைக் 'கரைக்காட்சி' அல்லது 'அர்ச்சுனன் தவம்' எனப்படும் மாமல்லபுரப் பாறைச் சிற்பம் என்பது. மேலும் தன் பின்னங்களால் முகத்தைச் சொரிந்து கொள்ளும் மான், மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்படும் காட்டரசன், குட்டிகளுடன் கூடிய யானைத் தம்பதி, பறவைகள், பாம்புகள், எலிகள், பூனைகள் எல்லாம் உள்ளத்தைக் கொள்ளும் வண்ணம் காட்சி தருகின்றன.

கல்லில் குடைந்த குகையொன்று பக்கத்திலே இருக்கிறது. பால் கறக்கும் ஆயனையும், கன்றுடன் குலாவும் பசுவினையும் அதில் பார்க்கிறோம்.

குகைக்கோயிலினுள்ளே குனிந்துநிற்கும் குரங்குகளின் மீது தூண்களும் அமைத்திருக்கிறார்கள். என்ன அழகு! என்ன அழகு!

ஒரே கல்லில் செதுக்கிய கோவில்களைக் காணக்காணக் கண்கள் களிகொள்ளும். அவற்றைத் தேர்கள் என்பர். பல்லவர் காலத்துக்குமுன்பிருந்த கோவிலின் தோற்றத்தை அறிய இவை உதவுகின்றன என்பர். அறிஞர் பெருமக்கள் இந்தக் கோவில்களின் அருகே உள்ள யானை ஒரே கல்லில் செதுக்கியது; பார்க்க மகிழ்ச்சியைத் தரவல்ல ஒரு சிற்பமாகும்.

மற்றும் இதற்கருகே காட்சியளிப்பவை, சிங்கம், காளை என்பனவற்றின் சிற்பங்களாகும். இவற்றை எவ்வளவு நேரம் பார்த்தாலும் சலிப்புத் தட்டவே தட்டாது. பார்த்துக்கொண்டே இருக்கலாம்.

மற்றும் இதற்கருகே காட்சியளிப்பவை, சிங்கம், காளை என்பனவற்றின் சிற்பங்களாகும். இவற்றை எவ்வளவு நேரம் பார்த்தாலும் சலிப்புத் தட்டவே தட்டாது. பார்த்துக்கொண்டே இருக்கலாம்.

மல்லைக் கடுத்துப் பல்லவர் காலச் சிற்பக்கலையின் செழிப்பை உணர்த்துவது காஞ்சிப்பதியாகும். காஞ்சிக்கண் விளங்கும் கைலாசநாதர் கோவிலின்கண்ணே இராசசிம்மன் காலத்துச் சிற்பங்களைக் கண்டுகளிக்கலாம். கோவிலின் திருச்சுற்றுக்கள் முழுதும் சிற்பங்கள் செறிந்து தோன்றுகின்றன. எனவே அக்கோவிலைச் சிற்பக்களஞ்சியம் என்றே

சொல்லலாம். சிவன்-உமை திருமணம், அயன் - நாமகள் திருமணம், திருமால்- திருமகள் திருமணம், பாற்கடல்கடைந்த வரலாறு, திரிபுரம் எரித்த வரலாறு, சிவன் எமனை உதைத்த கதை சிவன்-அர்ச்சுனன் போர், இலங்கை வேந்தன் கைலைமலை பெயர்க்கும் காட்சி, சிவன் நால்வர்க்கற முரைத்தல், திருமால் சிவனை வழிபட்டு ஆழிபெறுதல் ஆகியன பற்றிய சிற்பங்கள் சிற்பச் செழுமைமிக்குத் தோன்றுகின்றன.

சிவன் எட்டுக் கைகளுடன் ஆடும் பலவகை நடனங்களை விளக்கும் சிற்பங்கள் போற்றத் தக்கன லதாவ்ரிசிக நடனம் காணக் கண்கள் ஒளிபெறும். மாற்றும் நாதாந்த நடனம், குஞ்சிதபாத நடனம் என்ற இரு நடனச்சிற்பங்கள் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு உயிரை ஈர்ப்பனவாம்.

அடுத்து, சிற்பம் பல செறிந்த கோவில் காஞ்சி வைகுந்தப்பெருமாள் கோவிலாகும். அங்கே சிற்பங்கள் வரிசை வரிசையாகக் காட்சி அளிக்கின்றன. இச் சிற்பங்கள் அக் காலப் பல்லவர் ஆட்சியில் ஏற்பட்ட பல நிகழ்ச்சிகளைக் குறித்தெழுந்தனவாதல் வேண்டும். அவற்றிலே பல்லவ மல்லன் பட்டம்பெறுங் காட்சி அழகுடையது.

சிற்பக்கலை (சோழர் காலம்)

பல்லவர்கள் கற்பணிக்கு அடித்தளக்கல் நாட்டிச் சென்றனர். சோழர்கள் கட்டடத்தைக் கட்டினர். பல்லவர் காலக் கருவறையிலுள்ள சுதை உருவங்கள் எல்லாம் சோழர் காலத்திலே கற்சிற்பங்களாக மாறின. சோழர் காலத்திலே சிற்பக்கலை மிக நன்றாக வளர்க்கப்பட்டது. சோழர்காலச் சிற்பக்கலை நடம்புரியும் கோவில்கள் பல. அவற்றுள்ளே சிறந்தன நான்கு. அவையாவன:— 1. முதல் இராசராசன் கட்டிய பெரியகோவில், 2. முதல்

ராசேந்திரன் கட்டிய கங்கைகொண்ட சோழேச்சரம் 3. இரண்டாம் ராசராசன் கட்டிய தாராசுரத்துச் சிவன் கோவில், 4. 3–ஆம் குலோத்துங்கன் கட்டிய திரிபுவன வீரேச்சரம்.

பலவகைச் சிற்பங்கள்

சோழர்காலத்துப் பலவகையான உருவச்சிற்பங்கள் கண்ணைக் கவருந்தகையன. 14 அடி உயரமுள்ள வாயிற் காவலர் உருவங்கள், கலைமகள், அலைமகள், உருவங்கள், மிகப்பெரிய நந்தி, விமானத்தில் காணப்படும் பலவகை உருவச் சிற்பங்கள், தூண்கள், நவக்கிரகங்கள், அரசன் – அரசியர் உருவங்கள், சண்டேசரப்பதம் உணர்த்தும் சிற்பங்கள் முதலியன குறிப்பிடத்தக்க சிறப்புடையன.

தஞ்சை ராசராசேச்சரம்

18 அடி உயரமும், 8 அடி அகலமும் உள்ள 14 வாயிற் காவலர் உருவங்கள், தெற்கு வாயிலில் கீழ்ப்புறத்துள்ள இலட்சுமி, வடக்கு வாயிலின் கீழ்ப்புறத்துள்ள கலைமகள் ஆகியவரின் சிற்பங்கள் அழகுடன் திகழ்கின்றன. தஞ்சைக் கோவிலின் மதில்கள் முழுதும் நந்திச் சிற்பங்கள் அணி செய்கின்றன. விழுந்தன போக எஞ்சியன 342. கோவில் விமானத்தின் தென்புற மதில் பக்கத்தில் சோழ வீரர் பலரின் உருவங்களும், நடராசர், மார்க்கண்டேயர் முதலியோரின் திருமேனிகளும், திருச்சுற்றுமாளிகையிலுள்ள சமய குரவர் படிமங்களும் காணக் களிப்புத் தருவனவாம். கோவிலின் தெற்கு விக்கிரமன் திருவாயிலில் பௌத்த உருவச்சிலைகள் காணப்படுகின்றன. வடகோபுரத்திலே ஓர் ஐரோப்பியர் உருவம் காணப்படுகின்றது. மற்றும் நம்பி ஆரூரர், நங்கை பரவையார், அப்பர், சம்பந்தர், சிறுத்தொண்டர் ஆகியோரது திருமேனிகளும்,

இராசராசன், அவன் மனைவி உலகமாதேவி என்பவரின் படிமங்களும் உள. இங்குள்ள நந்தி இந்தியாவிலேயே இரண்டாவதாகும். உயரம் 12 அடி, அகலம் $8\frac{1}{4}$ அடி, நீளம் $19\frac{1}{2}$ அடி. கோயிலின் வடமேற்குப் பிரகாரத்திலுள்ள ஆறுமுகப் பெருமானின் கோயில் தென்னகச் சிற்பக் களஞ்சியமாகும்.

கங்கைகொண்ட சோழச்சரம்

இங்குள்ள மகாமண்டபத்திலுள்ள சம்பந்தரின் திருவுருவமும், துர்க்கையின் சிலையும் வேலைப்பாடுடையன. மண்டப மேற்கட்டியில் பொறித்துள்ள நவக்கிரகக் கோள்களின் அமைப்பு வேறெங்கும் காணப்படாத புதுமை வாய்ந்தது. கதிரவன் தேர், அட்டதிக்குப் பாலகர், அவர்க்குமேல் நவக்கிரக அமைப்பு, நடுவண் பதுமபீடம். இவையனைத்தும் ஒரே வட்டக் கல்லில் அமைந்துள்ளன. அர்த்த மண்டபத்தூண்கட்குமேல் பலவகை நடனச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இலிங்கத்தை நோக்கிய எதிர்ச்சுவர்மீது ஆறு வரிசைச் சிற்பங்கள் உயிர்க்களையுடன் பொலிகின்றன. கோயில் விமானத்திலே பல சிற்பம் உள. கோயிலின் வெளிப்புறத்திலே சிற்பந்திகழ் உருவம் பல உள. தென்னிந்தியாவிலுள்ள சிற்பங்களிலும் அவற்றைப் பின்பற்றிய சாவாத் தீவிலுள்ள உயர்ந்த சிற்பங்களிலும் இவை மேம்பட்டன என்பர். இங்குள்ள தேவகணம், தேவமாதர், சண்டேசரப்பதம் ஆகிய சிற்பங்கள் நரசிம்மனின் மல்லைச் சிற்பங்களையே அடிப்படையாகக்கொண்டவை எனத் துப்ரேல் கூறினும், அவற்றுக்குச் சுமார் 300 ஆண்டுகளுக்குப்பின் எழுந்த இவ்வுருவங்கள் அவற்றைக் காட்டிலும் அழகும் கலை நுணுக்கமும், முதிர்ச்சியும் கொண்டு இலங்குவன ஆகும்.

தாராசுரத்துச் சிவன்கோயில்

இங்குள்ள சிற்பங்கள் பல்லவர்கால வேலைப்பாடு உடையன. கோயில் வரலாற்றினையும், குங்குலியக்கலையர் சரித்திரத்தையும் விளக்கும் சிற்ப உருவங்கள் காணத் தக்கன. இங்குள்ள 'இராசகம்பீரன் மண்டபம்' சிற்பம் பொதுளிய ஒன்று, மற்றும் நடராசர் மண்டபத்தில் உள்ள ஒவ்வொரு தூணும் சிற்பம் செதுக்கப்பெற்றவையாம். இம்மண்டபத்துக்கு அடுத்த திருச்சுற்று மாளிகையிலுள்ள பிட்சாடனருடன் விரகவேதனையில் அகப்பட்ட தாருகாவன முனிவர் பத்தினிகளும், இதன் அடுத்த பத்தியில், மற்றும் 108 சிவாச்சாரியர்களுடைய சிறு உருவங்களும் செதுக்கப் பட்டிருக்கின்றன. இக்கோவிலில் நாயன்மார் வரலாறு களும் செதுக்கப்பட்டுள்ளன. சுவர்ப்புரையிலுள்ள தெய் வதத் திருவுருவங்கள் சிறப்புடையன. இக்கோயில்சிற்பக் கலையின் நிலைக்களம் என்னலாம் மற்றும் இங்கு, ஒரு யானையின்மேல் சிங்கம் ஏறி போர் செய்வதும், ஒரு யானை யும் காளையும் சேர்ந்து ஒரே தலையைப் பெற்றிருப்பதும் காணக் கண்பலவேண்டும். யானையும் காளையும் சேர்ந்த சிற்பத்தின் தலை, யானைத்தலை மாதிரியும் இருக்கிறது. காளை யின் தலை மாதிரியும் இருக்கிறது.

சிதம்பரக் கோவில் மேலைக்கோபுர வாயிலிலும், சிவ காமியம்மன் கோவிற்றிருச் சுற்றுமாளிகையின் அடிப்புறச் சுவர்களிலும் பலவித நடனச் சிற்பங்கள் பொதுவியுள.

பிற்காலச் சிற்பக்கலை

ஒய்சளர்கள்

இவர்கள் காலச் சிற்பக்கலைக்கு உறைவிடங்கள் பேலூர்க்கோவிலும், அளயபீடு கோவிலும் ஆம். இந்த

இரண்டு கோவில்களிலும் கருவறையைச் சுற்றிலும் அணி அணியாக யானை, குதிரை. யாளி இவற்றைக் கணக்கற்ற நிலைகளில் செதுக்கி இருப்பது வியக்கத்தக்கது. இந்தச் சிற்பங்களுள் ஒன்றில் ஒரு பெண்ணின் ஆடையில் தேளின் உருவத்தைச் செதுக்கி இருக்கிறார்கள்.

விசயநகர வேந்தர் ஆட்சியில் தமிழகத்தில் சிற்பக்கலை சிறந்தே விளங்கியது. மஞ்சுகண் துஞ்சும் பெருங்கோபுரங்கள் இவர் காலத்தில் எழுந்தன. அவற்றிலே சுதை உருவங்கள் அமைக்கப்பட்டன. திருவண்ணாமலைக் கோபுரமும், அதிலுள்ள சிற்பம் பலவும், வாயிலில் உள்ள நடனக்கற்சிற்பங்களும் இக்காலத்தன விசயநகர ஆட்சியில், தமிழகத்திலே, தெலுங்கு, கன்னடம், தமிழ் ஆகிய மூந்நாட்டுச் சிற்பக்கலை யாறுகள் ஒன்று கலந்தன. இவர்கள், தாம் கட்டிய கல்யாண மண்டபங்களின் தூண் ஒவ்வொன்றிலும் யானை, குதிரை, யாளி இவை தவிரப் பிற விலங்குகளையும் அற்புதமாகக் கல்லில் உருவாக்கி உள்ளார்கள் மண்டபத்தின் மேல்பாகத்தில் பல பறவைகள் மலர்களைக் கொத்தும் சிற்பக்காட்சியின் செவ்வியே செவ்வி! பலவகை ஓசைகளை எழுப்பும் கற்றூண்களும் இக்காலத்தெழுந்தன. பல சிறிய கற்றூண்களைக் கொண்ட பெரிய தூண்கள் இக்காலத்தவையே சில ஊர்களில் இராயர் கோபுரம் என வழங்கப் படுபவை இக்காலத்தவையே.

நாயக்கர் காலம்

தமிழகத்தினை நாயக்கர்கள் 16, 17, 18 ஆகிய மூன்று நூற்றாண்டுகள் ஆண்டனர்; விசயநகர வேந்தர் ஆட்சிக்குட்பட்டே ஆண்டனர். இவர்கள் காலத்திலே விசயநகரச் சிற்ப முறையோடு இவர்கட்கே உரிய சிற்பமுறையும் வளர்ந்தது. நாயக்கர் காலச் சிற்பச் செழுமைக்கு உறைவிடங்கள் பல. அவற்றுட் சிறந்தன நெல்லையப்பர் கோவில், நெல்லை கண்ண

புரப் (கிருஷ்ணபுரம்) பெருமாள்கோவில், மதுரை மீனாட்சி கோவில். ஆண்டாள் கோவில் என்பனவாம். மதுரைக் கோவில் சிற்பக்கலைக்கே களஞ்சியம். புதுமண்டபம் சிற்பப் புதையல்; ஆயிரக்கால் மண்டபம் சிற்பத்தின் உறைவிடம். இங்குள்ள ஒவ்வொரு தூணிலும் சிற்பம் பல செதுக்கப் பெற்றுள. ஆயிரக்கால் மண்டபத்திலுள்ள கண்ணப்பர் சிலை, அரிச்சந்திரன் - சந்திரமதி சிலைகள், குறவன் சிலை, குறத்தி சிலை, இரதி சிலை ஆகியன பார்க்கத் தக்கன. இவை மூலம் அக்கால அணிவகை, ஆடை முறை முதலியன காணலாம்.

குறவன் சிலை

உருண்டு திரண்ட திண்ணிய உடல், அகன்ற மார்பு கடுத்த நோக்கு ஆகியன சிலையில் செவ்வையாக அமைந்துள்ளன. அவன் அணி பல அணிந்துள்ளான்.

குறத்தி சிலை

குறத்தி 4 பிள்ளைகட்குத் தாய் ஒன்று முதுகில், ஒன்று கூடையில், ஒன்று மார்புத் துணியில், ஒன்று கீழே கையைப் பிடித்துக்கொண்டு தரையில் என்றிவ்வாறு நிற்கின்றன அக் குழந்தைகள். குழந்தை இருக்கும் கூடையினைச் செதுக்கிய சிற்பியே சிற்பி! இவற்றின் அருமையை நேரிற்பார்ப் போரே உணர்வர்.

மோகினியின் உருவம் நம் உயிரை வாங்குகிறது. பிச்சாடனரைக் கண்டதும், கலைசரிய, கைசோர, வளை கழல, குழல் நெகிழ, உடல் வளைந்து குழைய, கண்களிலே களிமயக்கமும் ஒழுக, முகத்தைச் சற்றே சாய்த்துவரும் தாருகாவனத்து முனிபத்தினியின் உருவச்சிற்பம் அழகுமிக்கது. சிவனது ஊர்த்துவத் தாண்டவம் சிற்பக்கலையின் உறை

விடம். கோவைப் பேரூரிலும் நாயக்கர் காலச்சிற்பங்கள் உள.

கண்ணபுரச் சிற்பங்கள்

நெல்லைக் கண்ணபுர கிருஷ்ணபுரம் பெருமாள் கோவில் முன்மண்டபத்தூண் ஒவ்வொன்றும் சிற்பம் பல பொருந்தியது.

இரண்டாம் தூணில் பல சிலைகள் உள. அவற்றில் குறிப்பிடத் தக்கது குறத்தி சிலை. குறத்தி கொற்றவன் மகளைத் தோளிற் சுமந்து ஓடுகிறான். தூணின் கீழ்ப்புறம் அரசியின் சிற்பம். அவள் அன்னத்தின் மீது உள்ளாள். தன் கைக் கிலுகிலுப்பை காட்டிக் குமரன் கவனத்தை ஈர்க்க முயன்று தோற்கிறாள். தூணின் வடபால் அரசி குறி கேட்கும் காட்சி சுவைமிக்கது. மன்னன், மகளைத் தேடிக் குதிரைமீது வருகிறான். ஒருவன் வழி மறிக்கிறான். குதிரை தன் முன்னங்கால்களால் அவனை அடிப்படுத்தி நசுக்குகிறது. வீரன் நிலத்தில் தன் இருகைகளை அழுத்தி ஊன்றி மூச்சடக்குகிறான். இது மேல்புறம் உளது.

ஐந்தாம் தூணில் குறவனின் சிற்பம் உளது.

மன்னன் மகளைக் குறவன் தூக்கிச் சென்றுவிடுகிறான். பின்னால் இளவரசன் குதிரைமீது துரத்திவருகிறான், ஈட்டியால் குறவன் விலாவிற் குத்துகிறான். குருதி பெருகுகிறது. குத்துண்ட குறவன் வலிதாங்காது துடிக்கிறான். விலா எலும்பும், கழுத்து நரம்பும் தெரியக் குறவன் உடலை வளைத்துச் சமாளிக்கிறான். குறவற் கிடப்பக்கமாக ஒரு வீரன் வாளொடு குறவன்மீது பாய்கிறான். இளவரசி குறவன் குடுமியைப் பற்றி ஈர்க்கிறாள். அவள் முகம் பொலிவுடன் திகழ்கிறது ஏன்?

மற்றும் இரதி, தோழியர், நடனமாதர் ஆகியோர் சிற்பம் அழகுடையன.

நெல்லையப்பர் கோவில் கோபுரச் சிற்பங்களும் மண்டபத்தூண் சிற்பங்களும், நுழைவாயில் மரச்சிற்பங்களும் சிற்பக்கலைத்திறன் உடையன.

தஞ்சையரண்மனையில் உள்ள சரபோசி மன்னர் சிலை சலவைக் கல்லால் ஆயது. தந்தத்தில் கடைந்ததுபோலக் காட்சி தருகிறது. இதன்மூலம் மாராட்டிரர் காலச் சிற்பக்கலை விளங்கும்.

ஆங்கிலேயர் காலத்தில் வழிவழியாக வந்த சிற்பக்கலை மேலும் வளர்ச்சி பெற்றது. இந்திய நாட்டு அரசப் பிரதிநிதிகளின் சிலைகள், டாக்டர் ஏ. எல். முதலியார், அரங்காச்சாரி, காமராசர் ஆகியோர் சிலைகள் சிற்பக்கலையோடு உள. இந்த நூற்றாண்டில் சென்னையில் அறிஞர் நாகப்பா சிறந்த சிற்பக்கலைஞராக இருந்து மறைந்துளார்.

திருவாடானைக் கோவிற் கோபுரமும், சிற்பங்களும் 5 ஆண்டுக்கு முன்னர்தான் தோன்றியவை. இன்னும் பல கோவில்கள் புதுப்பிக்கப்பட்டுள.

அய்யனார், முனீசுரர் கோவில்களிலே செங்கல், மண் சுதை இவற்றாலான குதிரைகள் பெரிதாக அமைந்துள. உள்ளீடு இலாக் குதிரை செய்து சுடல், இன்றல்ல, பழங் காலத்திலிருந்தே வந்த பழக்கமாகும்.

முடிவுரை

இயற்கை உருவத்தை உள்ளபடியே விளக்குவது இரேக்கச் சிற்பம், உணர்ச்சிகளையும் கருத்துக்களையும்

உணர்த்துவது நம் சிற்பம். அயல்நாட்டுச் சிற்பங்களின் உருவ அமைப்போடு நம் உள்ளம் நின்றுவிடும். அதற்கப் பாற் செல்லாது. ஆனால், நம்நாட்டுச் சிற்பங்களைக் கண்டாலோ நம் உள்ளத்திலே ஓர் இறையுணர்வு பொங்கி வருகிறது. அயலவர் சிற்பம் கண்ணைக் கவரும். நம்மவர் சிற்பம், கண்ணோடு, கருத்தையும் உயிரையும் கவரும்.

14—11—1889

27—5—1964

Favourite Four Lines

The woods are lovely, dark and deep
But I have promises to keep
And miles to go before I sleep
And miles to go before I sleep

(Robert Frost)

விரும்பிய நான்கு வரிகள்

அல்சூழ்ந்த அடர்கானின் அழகுமிக அழகெனினும்
சொல்லியன பலபலநான் சுணங்காது செயல்வேண்டும்
செல்வழியும் நெடிதே நான் செலவேண்டும் உறங்கிடுமுன்
செல்வழியும் நெடிதே நான் செலவேண்டும் உறங்கிடுமுன்

(தமிழாக்கம் கி. ப.)

அன்பை மிஞ்சிய கடமை

(மதுரைக் குமரன்)

சர்தார் வல்லபாய் பட்டேல் குசராத்தில் ஒரு சாதாரன உழவர் குடும்பத்தில் தோன்றியவர். அக்குடும்பத்தில் கல்வியறிவு மிகுதியாகப் பெற்றவர்கள் இல்லை. ஆயினும் சிறுவயதிலேயே வல்லபாய் உள்ளத்தில் ஓர் எண்ணம் குடிகொண்டது. தான் செல்வாக்குடைய ஒரு பெரிய மனிதனாகத் திகழவேண்டும் என்பதே அவ்வெண்ணம். அக்காலத்தில் அப்பகுதியில் வழக்கறிஞர்களே செல்வாக்குடைய பெரிய மனிதர்களாக இருந்தனர். அதைக் கண்ட வல்லபாய் தானும் ஒரு வழக்கறிஞராவதையே தன் வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டார். வழக்கறிஞராவதற்கு ஆங்கிலம் கற்கவேண்டும். வல்லபாய் வாழ்ந்த கிராமத்தில் அதற்கு வாய்ப்பில்லை. அண்மையிலுள்ள ஊருக்குச் சென்று படிக்கக் குடும்பத்தின் பொருளாதாரம் இடங்கொடுக்கவில்லை. எனினும் வல்லபாய் மனந்தளரவில்லை. வாழ்க்கையில் வெற்றிபெற பணத்தைவிட ஊக்கமும் ஆர்வமுமே தேவை என்பதை அவ்வயதிலேயே வல்லபாய் உணர்ந்திருந்தார் போலும்.

உடைய ரெனப்படுவது ஊக்கம் அஃதில்லார்
உடைய துடையரோ மற்று (591)

ஒருவன் முன்னேற்றத்திற்குத் தேவையானது ஊக்கம் ஒன்றே. ஊக்கமில்லாது மற்றச் செல்வங்கள் எவ்வளவு இருப்பினும் அவை ஒருவனுக்குப் பயன்படாது. வல்லபா

யிடம் இயற்கையாகவே இவ்வுணர்ச்சி இருந்தது. வெளியூர் சென்று படிப்பதற்குப் பணமில்லையே என்று அவர் வாளா இருக்கவில்லை. சில நண்பர்களுடன் சேர்ந்து ஓர் அறையில் தங்கிக்கொண்டுத் தன் உணவைத் தானே சமைத்து உண்டு கல்வி கற்றார். வாரம் ஒரு முறை கால்நடையாகத் தன் ஊருக்குவந்து வேண்டிய தானியங்களை வீட்டிலிருந்து எடுத்துச் செல்வார். பெற்றோர்கள் அனுப்பும் பணத்தைக் கொண்டு பள்ளி விடுதியில் ஒரு கவலையுமற்று நேராநேரங்களில் உண்டு வாழ்ந்த மாணவர்களை விட தேர்வில் முதலாவதாகத் தேறினார் வல்லபாய்.

பள்ளிப் படிப்பை முடிக்கும் பொழுது வல்லபாய்க்கு வயது இருபத்திரண்டு. மேற்கொண்டு கல்லூரியில் படிப்பதற்குப் போதுமான பணம் இல்லை. ஆகவே வீட்டிலிருந்தே படித்துத் தேர்வுகள்எழுதி ஒரு மாவட்ட வழக்கறிஞராகும் தகுதியைப் பெற்றார். (இவ்வாறு படிக்க அக்காலத்தில் வாய்ப்புகள் இருந்தன) நண்பர்களிடம் கடன் வாங்கியே தன் அலுவலகத்தை அமைக்க வேண்டியிருந்தது. 'பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை' எனும் வள்ளுவர் வாக்கை யுணர்ந்தார். விரைந்து பொருள் தேடுவதில் ஈடுபட்டார். எவ்வளவு விரைவில் பொருள்தேட முடியுமோ அவ்வளவு விரைவில் தேட வேண்டுமென்று விரும்பினார். அதனால் உரிமை வழக்குகளை (Civil) விடக் குற்றவழக்கு (Criminal) களையே மேற்கொண்டார். குற்றவழக்குகளின் மூலமே விரைவில் மிகுதியான பொருள் வரும். தொழிலில் அக்கறையுடனும் நேர்மையுடனும் நடந்துகொண்டார். அதனால் வெற்றியும் புகழும் பொருளும் எளிதில் கிட்டிற்று. அசைவில்லாத ஊக்கமே அவருக்குத் துணையாக இருந்தது.

"ஆக்கம் அதர்வினய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை' (594)

ஊக்கம் உடையவர்கள் இருக்கும் இடத்தை வினவிக் கொண்டு ஆக்கம் செல்லும் என்றார் வள்ளுவரும்.

வழக்கறிஞராய்ப் புகழும் வெற்றியும் கண்ட வல்லபாய்க்கு ஒரு மனக்குறைமட்டும் இருந்துவந்தது. தனது கட்சிக்காரர்களில் சிலர் விருப்பத்திற் கிணங்க. அவர்களுடைய வழக்குகளை, இங்கிலாந்தில் படித்துவந்த பாரிஸ்டர்களுடன் இணைந்து வழக்காட நேரிட்டது; அவ்வழக்குகள் தன்னுடைய முழு உழைப்பினாலும் திறமையினாலுமே வெற்றி பெற்றாலும், தன்னைவிட அறிவிலும் திறமையிலும் குறைந்த அப் பாரிஸ்டர்கள் தன்னிலும் அதிகமாக ஊதியம் பெற்றனர்; அதற்குக் காரணம் அவர்கள் இங்கிலாந்து சென்று பட்டம் பெற்றதே யாகும். இக் குறையைப் போக்குவதற்குத் தானும் இங்கிலாந்து சென்று பட்டம் பெறவேண்டும் என்று முடிவு செய்தார்.

"அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்" (411)

எனும் பொய்யாமொழிக் கிணங்க வல்லபாய் தன் கைப் பொருளைக் கொண்டு இங்கிலாந்து சென்று கருமமே குறியாக இருந்து கல்வி கற்று முதல்தரமாகத் தேர்வுபெற்று வந்தார். இதற்கு இரண்டரை ஆண்டுகளாயிற்று.

இந்தியா திரும்பிய வல்லபாய் பம்பாய் நகரில் பாரிஸ்டர் தொழிலைத் தொடங்கினார். முன்னைவிடப் பன்மடங்கு புகழுந்திருவும் அவரை நாடி வந்தன. அச்சமயம் ஒருநாள் அவருடைய அன்பு மனைவி நோய்வாய்ப்பட்டாள். அவளுக்கு அறுவைச் சிகிச்சை செய்யவேண்டியதாயிற்று

அதற்காக மருத்துவமனையில் சேர்க்கப்பெற்ருள். இடையே ஒரு பெரிய கொலை வழக்கை நடத்த வல்லபாய் ஆநந்து நகருக்குச் செல்லவேண்டியதிருந்தது. அங்கு சென்று வந்து பின் மனைவிக்கு அறுவைச் சிகிச்சை செய்யவேண்டுமென்று மருத்துவரைக் கேட்டுக்கொண்டு ஆநந்துநகர் சென்று விட்டார்.

நீதி மன்றத்தில் வழக்கு நடந்துகொண்டிருந்தது. வல்லபாய் தன் கட்சிக்காக ஒரு முக்கியமான சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்துகொண்டிருந்தார். வழக்கின் வெற்றியும் தோல்வியும் அக்குறுக்கு விசாரணையைப் பொருத்தே இருந்தது. அச் சமயம் நீதிமன்றப் பணியாள் தந்தியொன்றைக்கொண்டுவந்து வல்லபாயிடம் கொடுத்தான். அதைப் பிரித்துப் படித்துப் பார்த்து மடித்துப் பையில் வைத்துக்கொண்டு தன் குறுக்கு விசாரணையை முன்போலவே தொடர்ந்து நடத்தினுர். அதன் பயனுய் இறுதியில் அவ் வழக்கில் வெற்றியும் பெற்ருர்.

தன் வேலையாவும் முடிந்து நீதிமன்றம் கலையும் பொழுதுதான் தனக்கு வந்த தந்திச் செய்தியை அவர் வெளியிட்டார். அவர் அன்பு மனைவி இறந்துவிட்டாள் என்பதே அச்செய்தி. என்னே அவர் கடமையுணர்ச்சி! மனைவியின்பால் அன்பற்றவரோ என்று ஐயப்படவேண்டாம். அப்பொழுது அவருக்கு வயது முப்பத்திமூன்று தான். எனினும் அவர் வேறு மணம் செய்துகொள்ளாது தன் வாழ்நாள் முழுவதையும் தனிமையாகக் கழித்தார். இதைவிட அவர் அன்பிற்கு வேறு சான்று வேண்டுமோ?

தன் அன்பிற்கு உரிய மனைவியின் மரணச் செய்தி அறிந்தும் கலங்காது அவர் தாம் மேற்கொண்ட

பொறுப்பை நிறைவேற்றினர். ஒருவன் எடுத்துக்கொண்ட முயற்சியை அறைகுறையாக விட்டுச்சென்ருல் உலகம் பழிக்கும் எனும் வள்ளுவர்வாக்கை வல்லபாய் உணர்ந்தார் கடமையையே பெரிதாகக் கருதி அழியாப் புகழைப் பெற்ருர்.

''அன்புடையாள் மாண்ட தறிந்துமே வல்லபாய்
நின்ருர் கலங்காது நீதிமன்றில் — என்ருல்
வினைக்கண் வினைகெட லோம்பல் வினைக்குறை
தீர்ந்தாரிற் றீர்ந்தன் றுலகு''

தமிழன்

''பாரவேந்தன்''

தமிழன், தமிழ்மொழி தமிழர் நாடென
அமைபவன் எவனு அவனே தமிழன்!
அஃதிலாக் கருத்தை அமைப்பவன் சழக்கன்.
எஃகின் உறுதியை இதயம் கொண்டே
இஃதென் நாடென இஃதென் மொழியென
இஃதென் பண்பென இஃதென் இனமென
உரைப்பவ னெல்லாம் உண்மைத் தமிழன்!
குரைக்கும் நாய்களே கொள்கையில் மற்ருேர்
தமிழனுக் கிதுவே இலக்கணப் பண்பே!

மதுரைக் காண்டமும் மன்னவன் சிறப்பும்

பண்டித வித்துவான் மு. உலகநாதன்
விரிவுரையாளர்:
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

[223-ஆம் பக்கத் தொடர்ச்சி]

பாண்டியனைக் கண்ணகி காணுகிருள். நீர்வார்கண்ணை எம்முன் வந்தோய் யாரையோநீ மடக்கொடியோய் எனக் கேட்ட மன்னவனை முதல்முதலில் கண்ணகி தான் நேருக்கு நேராக நின்று ஆராய்ச்சி இல்லாத மன்னவனே!' என்று விளிக்கிருள். அது அவனுக்குப் பெரும் அதிர்ச்சிதான் எனினும் அவள் வரலாற்றை அறிகிருன், கோவலன் கொல்லப் பட்டான் என்ற போதும் அவன் நெஞ்சம் நீதி தவறியதாக எண்ணவில்லை. ஏனெனில் அவன் நீதியே தவறியதில்லை. எனவே அவன் அவளுக்குச் சொல்லும் பதில் 'கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று' என்றும் அது அரசநீதி என்றும் கூறுகிருன். பின்பு உண்மை தெரிய வருகிறது. உடனே அரசன் தன் அறியாமைக்குத் தன் உயிரையே பலியிட்டு நிலையான புகழைத் தேடிக்கொள்கிருன். அவன் தேவியும் உடன்மாய்கிருள்.

> ''மன்பதை காக்கும் தென்புலம் காவல்
> என்முதற் பிழைத்தது கேடுகெவேன் ஆயுளென
> மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே'' (வழக்குரை: 75.77)

இச்சிறப்பினை வேறு எவரிடத்தும் எக்குடியிடத்தும் காண முடியாது. இருவரும் ஒருங்குமாய்ந்த புகழ் பாண்டியர்க்கே

உரியது. இதனைக்காட்டி இளங்கோவின் உள்ளம் நிறைவெய்துகிறது. அமைதி அடைகிறது.

மன்னவனும் தேவியும் இறக்கக் கண்ணகிக்கு ஓரளவு சினம் தணிகிறது. முன்பு 'வைவாளில் தப்பிய மன்னவன் கூடல்' என்றும் 'தீவேந்தன்' என்றும் உரைத்த கண்ணகி மதுரையை எரியூட்ட எண்ணும்போது தன் குற்றமின்மையை உணர்த்த விரும்பி

''நான்மாடக் கூடல் மகளிரும் மைந்தரும்
வானக் கடவுளரும் மாதவரும் கேட்டீமின்
யானமர் காதலன் தன்னைத் தவறிழைத்த
கோநகர் சீறினேன் குற்றமிலேன்''

(வஞ்சினமாலை: 39.43)

என்கின்றாள். இங்கே மதுரை அவள் வாயிலேயே நான்மாடக் கூடலென்று பாரட்டப்படுகிறது. அதனை அடுத்தே இளங்கோ கண்ணகி ஏவ 'நற்றேரான் கூடல் நகர்' புகையழல் மண்டிற்று என்கின்றார்.

வளைந்தகோலை நிமிர்க்க உயிராகிய அச்சாணியை ஈந்து செங்கோலாக்கி இந்நிலவுலகறியச் செய்தான் பாண்டியன். அப்பாண்டியனும் மதுரையும் கட்டுரைக் காதையில் 1. கொற்கைக் கொண்கண், 2. குமரித் துறைவன், 3. பொற்கோட்டு வரம்பன், 4. பொதியிற் பொருப்பன், 5. மறவேல் மன்னவன் என்றும், 1. மாபெரும்கூடல், 2. நிலைகெழுகூடல், 3. உரைசால் மதுரை என்றும் பலவாறு பாராட்டிப் பேசப்படுகின்றனர். இதனை கடைசியில் வரும் உரை பெறுகட்டுரையில்,

''முடிகெழு வேந்தர் மூவ ருள்ளும்
படைவிளங்கு தடக்கைப் பாண்டியர் குலத்தோர்
அறனும் மறனும் ஆற்றலும் அவர்தம்

பழவிறல் மூதூர்ப் பண்புமேம் படுதலும்
விழவுமலி சிறப்பும் விண்ணவர் வரவும்
ஓடியா இன்பத் தவருடை நாட்டுக்
குடியும் கூழின் பெருக்கமும் அவர்தம்
வையைப் பேரியாற வளஞ்சுரந் தூட்டலும்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிதலும்
ஆரபடி சாத்துவதி யென்றிரு விருத்தியும்
நேரத் தோன்றும் வரியும் குரவையும்
என்றிவை அனைத்தும் பிறபொருள் வைப்போடு
ஒன்றித் தோன்றும் தனிக்கோள் நிலைமையும்
வடவாரியர் படைகடந்து
தென்றமிழ்நா டொருங்குகாணப்
புரைதீர் கற்பின் தேவி தன்னுடன்
அரைசு கட்டில் துஞ்சிய பாண்டியன்
நெடுஞ்செழியனோ டொருபரிசா
நோக்கிக் கிடந்த
மதுரைக் காண்டம் முற்றிற்று"

என் று முடிக்கிறார்.

இவ் வரிகளால் மதுரைக்காண்டத்தில் மன்னவனின் சிறப்பினைக் காணமுடிகிறது. சேரன்தம்பி இளங்கோவின் உள்ளம் பைந்தமிழ் வளர்த்த பாண்டியநாட்டையும் அந் நாட்டில் சங்கம்வைத்து தமிழாண்ட பாண்டியனையும் எண்ணியபோது நெகிழ்ந்தது. அதன் காரணமாகவே பிற காண்டங்களினும் மதுரைக் காண்டத்தையும் மதுரையை யும் சிறப்பித்துப் பாடி மதுரைக் காண்டத்தை நடுநாயக மாக வைத்துச் சிறப்பித்துள்ளார் என உணரமுடிகிறது.

(முற்றும்)

தமிழர் வரலாற்றில் சொக்கலிங்கபுரம்

(புலவர், மணவை - கா. மாரன்)

தமிழகம் பன்னிரண்டாம் நூற்றுண்டின் முதுமையில் காவிரிக் கன்னியின் காதலர் காவலில் தங்கி புலிக்கொடியின் நிழலில் பள்ளி கொண்டிருந்தது. சேரனின் வில் நாண் ஏற்ற ஆளின்றி அவிழ்ந்து கிடந்தது. பாண்டியனின் வைகை நதி மீன் புனலற்ற மணல் மீது தூக்கி எரியப்பட்டு துடித்தது. சோழனுக்கு அவை காட்சிப் பொருளாகி கண்ணுக்கு விருந்தளித்தன.

இப்படி எதிர்ப்பாரும் பழிப்பாரும் அற்ற முதற் குலோத்துங்கன் பரம்பரை "திரிபுவனச் சக்கரவர்த்திகள்" என்ற மதுவில் மயங்கி நிலைமறந்து பலமிழந்தனர். நண்பர்கள் உட்பகையாளுர்கள். வாய்ப்புக் கிட்டுவதறிந்து முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் தன்னுட்டின் அடிமைத் தளையை அறுத் தெரியப் பொங்கி எழுந்தான்.

மண்ணில் கிடந்த கயல் விண்ணுற்றில் கொடியோடு விளையாடி புலியைப் பார்த்து இகழ்ந்து நகைத்தது நலமிழந்த புலி புதர்தேடி ஓடிற்று. வீடிழந்த மூன்றும் இராஜராஜ சோழன் செயலற்றுத் தவித்தான். சோழர்கள். பாண்டியர்களுக்கு இழைத்த கொடுமைகள் பலப்பல. அதை எண்ணி மாறவர்மன் சுந்தரபாண்டியன் கொதித்தான். பலிக்குப்பலி வாங்கத் துடித்து போர்முரசு கொட்டி விட்டான். பாண்டிய நாட்டு மறவர்படை அவன் கை காட்டிய திசையில் பாய்ந்தன. சோழன்படை திசை கொட்டுச் சிதறின. பாண்டியன் படை உள்நாட்டில் புகுந்து எழில்

நாடாம் சோழநாட்டை கீழே வரும் மெய்க்கீர்த்தி நிலைக்குக் கண்டார், இரங்கும் வண்ணம் செய்தது.

தஞ்சையும் உறந்தையும் செந்தழல் கொளுத்தி
வாவியும் ஆறும் அணிநீர் நலன் அழித்து
கூடமும் மாமதிலும் கோபுரமும் ஆடரங்கும்
மாடமும் மாளிகையும் மண்டபமும் பல இடித்து
கழுதை கொண்டு உழுது கவடிவித்தி
செம்பியனை சினம் இரியப் பொருது சுரம்புக ஓட்டி
பூங்கமல வாவிசூழ் பொன்னமராவதியில்
சோதிமணி மண்டபத்து இருந்து சோலைமலி
சோணடும் தான் இழந்த மாலையும் முடியும்
தர வருக என்றழைப்ப மானம் நிலைகுலையப்
போனவளவன்..........வீழ்ந்து தொழுது இரப்ப
பண்டு இழந்த சோழபதி என்னும் நாமமும்
தொல் நகரும் மீளவளங்கி விட்டருளி

இதனால் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் ''ஸ்ரீகோமாற பன்மரான...... திரிபுவனச் சக்கவர்த்திகள் ஸ்ரீசோணடு கொண்டருளியவன்'' என்றும்; சோணடு கொண்டு முடிகொண்ட சோழபுரத்து வீராபிசேகம் பண்ணியருளிய ஸ்ரீ சுந்தரபாண்டியன்'' என்றும் சிறப்புப் பெயர்களைப் பூண்டான், மும்முடியையும் ஒரு முடியாக்கி அணிந்து, மூன்று நாட்டினையும் தன்னுடைாக்கி ஆண்ட அவனுக்குப் பின் மூன்றுவது பட்டமாக சுமார் கி. பி. 1268 இல் பாண்டிய நாட்டை திரிபுவனச் சக்கரவர்த்திகள் என்ற சிறப்போடு ஆண்டவன் மாறவர்மன்குலசேகரபாண்டியன். அவனது கல்வெட்டே சொக்கலிங்கபுரத்தில் நான் கண்ட கல்வெட்டு. அதை இன்றைப தமிழ் எழுத்து வடிவில் கீழே தருகிறேன். (தொடரும்)

கல்வெட்டு இருக்கும் இடம்:-

மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் சொக்கலிங்கபுரம் அழகிய செமிஸ்வரமுடையார் திருக்கோவில் தெற்குப்புறச் சுவற்றில் வெட்டப்பட்டுள்ளது. மற்ற மூன்று பக்கச் சுவற்றிலும் அவனுடைய கல்வெட்டுக்களே இருக்கின்றன. இக்கோவில் அறநிலையப் பாதுகாப்பில் உள்ளதாகத் தெரிகிறது. இவ்வூர் காரைக்குடி - திண்டுக்கல் பெருவழியில் திண்டுக்கல்லில் இருந்து முப்பத்தாறுவது மைலில் இருக்கிறது.

கல்வெட்டின் காலம்

இவனது ஆட்சித் தொடக்கம் வரலாற்று ஆராச்சியாளர் முடிவுப்படி கி. பி. 1268-ம் ஆண்டாகும் அதனால் இக் கல்வெட்டு இவனது ஆட்சியில் முப்பத்தெட்டாம் ஆண்டில் வெட்டியதாகக் காணப்படுவதால் காலம் கி. பி. $1268+38=1306$ ஆகும்.

கல்வெட்டு வரிகள்:-

ஸ்வஸ்தி ஸ்ரீ கோமாரபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலசேகர தேவர்க்கு யாண்டு முப்பத்தெட்டாவது கன்னி ஞாயிறு செவ்வாய் கிழமையும் பெற்ற சோதிநாள்.........சுரபிநாட்டு தருக்காக்குடி ஊரவரும் சூளமாச கண்டன் ஊரவரும் அவனூவனேரி ஊரவரும் வீர சூளாமணி ஊரவரும் மேன்மலைஊரவர்க்கு பிரமாணம் பன்னிக்கொடுத்த பரிசாவது தாங்கள் முதலியார் சுரவித் திரு மேணிக்கு வீரர் அத்திக் குளத்துக்குத் தங்கள் ஊரில் நிச்சயம் பண்ணிய அச்சிலே அத்திக் குளத்துக்கு ஒரு அச்சுக்கிழித்து எங்களூர்களிளே விருத்திக் கொண்டேரத் தாங்கள் அவ்வாண்ட்ட புரட்சிமாதம் இறையிலி மடப்

புரையாகச் சந்திராதித்தவரை செல்லுபடியாகத் திருச் சூளக்கல் நாட்டிக் குடுப்பது. இப்படி சம்மதித்து மடப்புர இறையிலியாக திருச்சூளக்கல் நாட்டிப் பிரமாணம் பண்ணிக் குடுத்தோம். தருக்காக்குடி ஊரவரும் சூளமாச ஊரவரும் அவனூவனேரி ஊரவரும் வீரசூளாமணி ஊரவரும் மேன்மலை யூரவர்க்கு இளங்கோதரையன் எழுத்து மங்கள தேவ நாடாழ்வான் எழுத்து சுந்தரபாண்டியன் பல்லவ தரையன் எழுத்து சோழ பல்லவதரையன் எழுத்து நல்ல சிங்க தேவன் எழுத்து சுந்தர பாண்டியன் நாடாழ்வான் எழுத்து வீரப்புலி நாடாழ்வான் எழுத்து பூவனச்சிர பன்மன் எழுத்து.

கல்வெட்டுச் சொல் விளக்கம்:

ஸ்வஸ்தி = நலம்வளர்க—கோமாரபண்மர் = மன்னர் மாறவர்மன். திரிபுவனச் சக்கரவர்த்திகள் = சேர, சோழ பாண்டிய மூன்று நாட்டையும் ஆண்டமாமன்னர் யாண்டு முப்பத்தெட்டாவது = மாறவர்மன் குலசேகரபாண்டியன் பட்டமெய்தியதிலிருந்து முப்பத்தெட்டாம் ஆண்டில் கன்னி ஞாயிறு = புரட்டாசி மாதம் (ஞாயிற்றை மாதம் என்று சொல்லும் வழக்கம் உண்டு) சுரபிநாடு = அக்காலப் பாண்டிய நாட்டுப் பிரிவில் ஒன்று (இன்றைய மதுரை மாவட்டம் மேலூர்வட்டத்தின் வடபகுதிக்கு இப்பெயர்) தருகாக்குடி = இவ்வூர் இப்பகுதியில் இன்றும் இப்பெயரிலேயே அழைக்கப்படுகிறது. சூளமாசகண்டன். அவனூவனேரி, வீரசூளாமணி இந்த மூன்று ஊர்களும் எவ்வூர் என்று அறியமுடியாத நிலையில் உள்ளது. மேன்மலையூர் = இவ்வூர் நாயக்கர் கால ஆட்சியில் மாறி இன்று சொக்கலிங்கபுரம் என்று அழைக்கப்படுகிறது. இக்கல்வெட்டு இருக்கும் கோவிலின் பக்கத்தில் உள்ளமலைக்கு மேன்மலை என்று

இன்றும் வழங்கப்படுகிறது. அதனல் பண்டை மேன்மலே யூரே இன்றைய சொக்கலிங்கபுரம் என்று அறியலாம். பிரமானம் பண்ணி=வாக்குக்கொடுத்தல். பரிசாவது= வகையாவது. முதன்யார் சுரவித்திரு மேனிக்கு=முழுமுதற் கடவுளாகிய அவிர்சடை இறைவனுக்கு நீராட்ட. வீரர் அத்திக்குளத்துக்கு=வீரர் அத்தி என்பாரின் பெயர். அச் சிலே=குறிப்பிட்ட இடத்தில். எங்களூர்களி லேயிருந்து கொண்டரவச்சு=எங்கள் ஊர்களிலிருந்து உங்கள் ஊருக்கு வந்து [மேன்மலேயூர் எனப்படும் சொக்கலிங்கபுரத்திற்கு] அவ்வாண்டை=அவ்வாண்டில். இறையிலியாக=அரசாங்க வரிநீக்கி. மடப்புறம்=பெரியாருக்கு நினேவாகக் கொடுக்கும் கொடை நிலம்.

கல்வெட்டின் தெளிவு:

நலம் வளர்க திரு. கோமாறவர்மரான திரிபுரினச் சக்கரவர்த்திகள் திரு. குலசேகர தேவரின் ஆட்சியின் முப் பத்தெட்டாவது [கி. பி. 1268+38=1306] ஆண்டில் புரட் டாசித் திங்கள் செவ்வாய்கிழமை அன்று சுரபிநாட்டைச்சேர்ந்த தருகாக்குடி ஊரி னரும் ஊரினரும், வீரசூழமாசகண்ட ஊரினரும் அவனுவனேரி ஊரினரும் சேர்ந்து மேன்மலே ஊரினர்க்கு வாக்குக்கொடுத்த வகையாவது; நீங்கள் முழு முதற் கடவுளின் திருமேனிக்கு நீராட்ட வீரர் அத்தி என் பார் நினேவாகக் குளம் தோண்ட தங்கள் ஊரில் நிச்சயம் செய்யப்பட்ட இடத்தில் நாங்கள் எங்களூரிலிந்து உங்கள் ஊருக்கு வந்து அவ்வாண்டு புரட்டாசித் திங்கள் அரசாங்க வ்ரி செலுத்தாதது இடமாக திருச்சூளக் கல்லாகிய எல்லேக் கல் நாட்டி சந்திரர் சூரியர் உள்ளவரை நிலேத்திருக்க ஒப் பிக் கொடுத்தோம்.

இப்படிக்கு

இளங்கோதரையன் எழுத்து மங்கள தேவநாடாழ்வான் எழுத்து சுந்தரபாண்டியன் பல்லவதரையன் எழுத்து சோழபல்லவதரையன் எழுத்து - வீரப்புலி நாடாழ்வான் எழுத்து - மங்களபல்லராயன் எழுத்து-பூவண வச்சிரபன்மன் எழுத்து.

மாறவர்மன் குலசேகரன் வரலாறு

தமிழகம் முழுமையும் தன் ஒரு குடைக்குள் அடக்கி ஆண்டுவந்த சடையவர்மன் சுந்தபாண்டியனுக்கு அடுத்து கி. பி. 1268 ல் மாறவர்மன் குலசேகர பாண்டியன் முடி ஏற்ருன். தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றி ஆட்சி நடத்தியதால் எம்மண்டலமும் கொண்டருளிய ஸ்ரீகுலசேகர பாண்டியன் என்ற பட்டத்தைப் பெற்ருன்.

இவன் காலத்தில் இத்தாலிநாட்டு வெனிசு நகரத்தனாகிய மார்க்க போலவும், மகமதியனாகிய வாசப் என்பானும் பாண்டிய நாட்டை சுற்றிப்பார்த்து சிறப்பித்து எழுதியுள்ளனர். இவன் ஆட்சியில் அன்பும் அறனும் பெருகி நாடு பண்பும் பயனும் பெற்று விளங்கியது.

இவனுக்கு இருமைந்தர்கள் இருந்தனர். அவர்களில் சுந்தரபாண்டியன் என்பான் பட்டத்தரசியின் மகன். இவர்களில் வீரபாண்டியனே மன்னனாகும். இலக்கணம் அமைந்து கிடப்பதை அறிந்த மாறவர்மன் குலசேகரபாண்டியன் கி. பி. 1206ல் இளவரசுப்பட்டம் கட்டினான். இதையறிந்த சுந்தர பாண்டியன் வெகுண்டு தன் தந்தையை கி. பி. 1310 ஆண்டில் கொன்று வீரபாண்டியனோடு போரிட்டான். இந்த உட்பகையை முகமதியத் தலைவன் ஜலாலுதீன் அசன்ஷா தனக்குச் சாதகமாக்கிக்கொண்டு

இருவரையும் வென்று மதுரையைக் கைப்பற்றி முகமதிய ஆட்சியை கி. பி. 1330-ல் வேரூன்றச் செய்தான்.

மனம்மாணா உட்பகை தோன்றின் இனம்மாணா
ஏதம் பலவும் தரும் (குறள் 884)

என்ற திருவள்ளுவரின் இலக்கணத்திற்கு இலக்கிய மாகிய, பாண்டிய முடிமக்கள் ஏதிலார் தாக்குதலால் சிதறி தெண்பாண்டி நாடான திருநெல்வேலிக்கும், தென்காசிக் கும் சென்று தங்கி இன்று தமிழர் குடியோடு குடியாகி விட்டனர்.

என்றாலும் = அப்பெருமக்கள் காத்தளித்த செழுந்தமிழ் காப்பியங்கள் அவர்கள் தம் செம்பெருமையை என்னாளும் செப்பக் காத்திருக்கின்றன. இன்றும் அவர்கள் வெட்டிய கல்வெட்டுகள் அப்பெருமக்கள் நல்லாட்சியைச் சொல்லித் திருக்கோவில்தோறும் ஏந்திக் கொண்டிருக்கின்றன.

ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார் (குறள்)

தமிழன்

" பா. வே "

தமிழை உயிராய்த் தமிழன் மதிப்பான்!
தமிழைப் பழித்திடில் தன்னுயிர் கோதிப்பான்.
இருவிழி காக்கும் இமைகளைப் போல
வருவது வரட்டும் வருக! வாவென
புலியாய்ச் சீறி புகழினைச் சேர்ப்பான்!
எலிமனத் தவர்க்கிது கிலிகொளும் செயலே!

தமிழில் பிறமொழிச் சொற்கள்..!

புலவர்: கோவை வாணன்.
கோயம்புத்தூர்-1.

தமிழ் தனித்தது—சிறந்தது—செம்மையானது—செந்தமிழ் என்று போற்றப்படுவது—முதன்மையானது—பிறவற்றிற்கு வேருனது—பொருள் இலக்கணம் கொண்டது—கூட்டு எழுத்துக்கள் இல்லாதது—குறிப்புவினைகொண்டது—இடுகுறிப் பெயர் (பெரும்பாலும்) இல்லாதது— இனிய ஓசையுடையது—அஃறிணை. உயர்திணைப் பிரிவைக்கொண்டது—அழகும் தெளிவும் செறிந்தது!

இன்சுவை இலக்கியங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் தனிச்சிறப்புடையது. பழந்தமிழ் இலக்கணமாம் தொல்காப்பியம் செய்த தொல்காப்பியனாரைப் பெற்றுத் துறைதொறும் இலங்குவது. உலகிலேயே முதன் முதலில் கழகம் (சங்கம்) கூட்டி மொழிவளர்த்தது.காவலரால் கண்ணினும் உயர்வாகக் காக்கப்பட்டது. புலவர்தம் உயிரெனப் போற்றப்பட்டது.

வடமொழி தமிழ்நாட்டில் மிகப்பழைய காலந்தொட்டே வழங்கி வருகின்றது. கழகக் காலத்திற்கு முன்னதாகவே தமிழ்மொழியில் சில வடசொற்கள் கலந்து வந்துள்ளன என்பதைப் பழைய இலங்கியங்களைக்கொண்டு ஒருவாறு உணர முடிகிறது. தமிழரின் பழக்க வழக்கங்களையுணர்ந்து அவற்றிற்கேற்ப வடமொழியில் பல நூல்களை வடமொழியாளர் இயற்றினர். அதனால் தமிழ் நிகண்டுகளும் சொற்பெருக்கில் பெரிதாயின. தமிழரிடம் வழங்கி வந்த ஒரே தமிழ்மொழி வழக்காற்றில்—நாளடைவில் ஒலி-

சொல்முறை, சொற்சிதைவு முதலியவற்றில் மாற்றம் அடைந்து, பல வேற்று மொழிகளாக மாறின. தமிழ்மொழியின் வேறு வடிவங்களே கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு போன்றவையாகும். இதனை,

"கன்னடமும் களிதெலுங்கும்
கவின்மலையா ளமும்துளுவும்
உன்னுதிரத் துதித்தெழுந்தே
யொன்றுபல வாயிடினும்"

என்று பேராசிரியர் சுந்தரம் பிள்ளை தெளிவாகக் குறிக்கின்றார்.

சமணர் காலத்தில் இன்று வழக்கில் உள்ள பெரும்பாலான வடசொற்கள் தமிழில் வந்து புகுந்தன. ஆனல், சமணர் தமிழ்மொழிக்கு அரிய தொண்டுகள் செய்துள்ளனர். உண்மையில் சமணர் தழைத்தோங்கிய காலமே தமிழ்மொழியின் வளர்ச்சிக் காலம் ஆகும். இக்காலத்தில் தான் எண்ணற்ற இலக்கியங்கள் தோன்றின. தமிழ் நிகண்டுகளும், காப்பிய நூல்களும் இக்காலத்தில்தான் எழுந்தன.

சமய நூல்களில் வழங்கும் சொற்கள் காலத்தால் பிற்பட்டவை. அக்காலத்திம் நிறைந்த சமயங்களால் நம் தமிழகம் சூழப்பட்டிருந்தது. வடநாட்டிலிருந்து பௌத்தம் அருகதம், வைதிகம், ஆசீவதம் ஆகிய சமயங்கள் தமிழ்நாட்டில் புகுந்தனவென்று இலக்கியங்களால் அறிகின்றோம். அவ்வச் சமயத்தார், தத்தம் சமயத்தைப்பரப்ப முயன்றிருப்பர். அவர் தங்கள் சமயக் கருத்துக்களைத் தமிழ்மொழியில் பெயர்த்தபோது, வடசொற்கள் பலவற்றைக் கலந்திருப்பர் என்பது நன்கு பொருத்தமன்றோ?

பிறமொழிச் சொற்கள் தமிழில் வந்து கலவாதிருக்கத் தமிழ்ப்புலவர் எவ்வளவோ முயன்றுபார்த்தும், அச்சொற்கள் கலப்பதை விலக்க முடியவில்லை. ஆகலின், அவ்வடமொழிச் சொற்களில், சிற்சில சொற்களை மட்டிலும் தம் எழுத்திலக்கண முறைகட்குத் தக்கவாறு திரித்துக்கொண்டனர். எனவே, பிறமொழிச் சொற்களாம் வடமொழி போன்றவை தமிழில் வருவதற்கேற்ற முறைகளும் அவ்வப்போது தமிழ்ப்புலவரால் வகுக்கப்பட்டன. கழகக் காலத்திலேயே தமிழ்மொழியில் வடசொற்கள் கலந்துள்ளன. சொற்களின் வகையைக் கூறும் ஆசிரியர் தொல்காப்பியர். வடசொல்லைக் கூறும்போது,

"வடசொற் கிளவி வடவெழுத் தோரீஇ
எழுத்தோடு புணர்ந்த சொல்லா கும்மே"

என்றும்,

"சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்"

என்றும் குறிப்பிடுகின்றார்.

பொதுவெழுத்தான் இயன்ற சொற்களும், வடவெழுத்தான் இயன்று திரிந்த நிலையில் உள்ள சொற்களும் கழக இலக்கியங்களில் பயின்று வந்திருப்பதைக் காணலாம். காட்டாகச் சிலவற்றைக்காண்பாம். வாரி, மேரு, குங்குமம், முதலிய சொற்கள் பொது எழுத்தானியன்றவை. 'அரமிய வியலகத் தியம்பும்' (அகம்: 124) என்னும் அகநானூற்றுத் தொடரில் 'அரமியம்' என்னும் சொல் 'ஹர்ம்யா' என்பதின் சிதைவாகும்.

நன்னூலில், வடமொழியைப் பற்றிக் கூறும் ஆசிரியர் பவணந்தியார்.

"பொதுவெழுத் தானும் சிறப்பெழுத் தானும்
ஈரெழுத் தானும் இயைவன வடசொல்'

என்று கூறிப் போந்தமை நினைவு கூர்தற்குரித்து.

பிறமொழிச் சொற்கள் தமிழில் புகுந்தன. அங்ஙனம் புகுந்தாலும், அவை தமிழ்மொழியின் இயல்புக் கேற்ற வாறே புகுந்திருக்கின்றன. அச்சொற்கள் பிறமொழியி னின்று நேராகத் தமிழில் நுழையாமல், பாகத மொழிக ளின் வழியாகத்தான் நுழைந்திருக்கின்றன என்பது அறி ஞர் கருத்து. இக்காலத்தில், பாலமொழிச் சொற்கள் தமி ழில் கலந்திருக்க வேண்டும். இதனல். பாலிமொழியறிந்த பௌத்தத் துறவியர் தமிழகத்திற்கு வந்திருக்க வேண்டும் என்பது போதருமன்றோ?

இவையெல்லாம் ஏட்டு வழக்கில் நுழைவதற்கு முன் னரே, பேச்சுவழக்கில் நுழைந்திருத்தல் வேண்டும். காட் டாக, தமிழ் ஆண்டுகளின் பெயர்கள், மாதங்கள் ஆகிய வற்றைக் குறிப்பிடலாம்.ஒப்பிலக்கணம் 'கண்டபண்டாரகர் (டாக்டர்) கால்டுவெல் அவர் தம் காட்டுக்களேயே ஈண் டுக் குறிப்பிடலாம். 'பூர்வ-ஆஷாடம்' என்னும் சொல், தமிழில் 'பூராடம்' ஆயிற்று.'ஆஷாடம்' என்ற சொல், 'ஆடம்' என்ருகிப் பின்னரே 'ஆடி' என்று ஆயிற்று. 'அஸ்வினி' என்னும் வடசொல் தமிழில் 'ஐப்பசி' என்ரு யிற்று. விண்மீன், திங்கட் பெயர்கள் அனைத்திற்கும், தெலுங்கு. கன்னடம் முதலிய மொழிகளில் தனி வட மொழிச் சொற்கள் வடமொழி வடிவத்திலே வருகின்றன.

வடமொழி, தமிழ்மொழியை அறிந்து சமணப்புலவர் வடமொழி நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தனர். அப் போது மிகுதியாக வடசொற்கள் தமிழ்மொழியில் கலந்தன

இதன் பயனாக வேறொரு புதியதோர் உரைநடை தோன்றியது. இதற்கு மணிப் பிரவாளம் என்று பெயர். இந்த நடையிலே சில நூல்கள் எழுந்தன. 'ஸ்ரீபுராணம்' என்னும் நூல் இந் நடையைச் சார்ந்ததே. நெறிமுறைகளையும், தத்தம் சமய நூல்களையும் தமிழுக்குப் புகட்டுவான் வேண்டித் தமிழகம் நோக்கி வந்தோர், தமது கருத்துக்களை மணிப் பிரவாள நடையிலேயே வெளியிட்டனர். நூல்களுக்கு உரையெழுதப் புகுந்தோரும். இந்நடையிலே உரைகள் எழுதுவாராயினர். 'நாலாயிரப் பிரபந்தம்' என்ற நூலுக்கு இந்நடையில்தான் உரை எழுதினர். இதைப் போன்றே, வேற்று மொழிகளில் உள்ள கதைகள் முதலியன தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. இந்த நிலையிலே நிறைய வேற்று மொழிச் சொற்கள் தமிழில் கலந்தன. வில்லிப்புத்தூரார் 'பாரதம்' 'நைடதம்', தேவாரம் போன்ற நூல்களில் வட சொற்கள் ஏராளமாகக்கலந்துள்ளதனை எளிதில்காணலாம்.

நன்னூல் பவணந்தியாரும், சின்னூல் குணவீர பண்டிதரும், உரையாசிரியர் பரிமேலழகரும் வடநூல் இலக்கணப் போக்கைத் தழுவியே எழுதியிருக்கின்றனர். 'பிரயோக விவேகம்' என்னும் இலக்கண நூல் வடமொழி ஒலியியலைத் தமிழின்கண் கூறித் தமிழோடு ஒப்பிடப்பட்டுள்ளது.

பின்னர், 'இலக்கணக் கொத்துரை' செய்த சுவாமிநாத தேசிகர், வடமொழி இலக்கணத்தைத் தமிழோடு கலந்த மட்டிலும் நில்லாது, பாயிரத்தின்கண்,

''அன்றியும் தமிழ்நூற் களவிலை அவற்றுள்
ஒன்றே யாயினும் தனித்தமி ழுண்டோ?
வடமொழி தமிழ்மொழி எனவிரு மொழியினும்
இலக்கணம் ஒன்றே என்றே எண்ணுக''

என்று கூறியிருப்பது, 'மொழியாராய்ச்சியில்லாத இருட் காலத்தெழுந்ததாகலின்' அது இற்றைக்குப் பொருந்தாது.

"கேட்குந போலவும் கிளக்குந போலவும்
இயக்குந போலவும் இயற்றுந போலவும்
அஃறிணை மருங்கினும் அறையப் படுமே"

என்ற முறையால் தமிழ்மொழியின் அணிநலத்தை உணர முடிகிறது.

ஆகலின், தமிழ்மொழி வேறு; வடமொழி வேறு. ஒன் றற்கொன்று யாதோர் இயைபும் இல்லை. மொழிநூல் உண்மைப்படி, பிறமொழிச் சொற்கள் தமிழ்மொழியில் வந்து வழங்க வாய்ப்புக்கள் இருந்தன.

இங்ஙனம், பிறமொழிச் சொற்கள் தமிழ் மொழியில் கலந்தமையால் ஏற்பட்ட தீமைகள் பலவாகும். தமிழரால் ஏற்படுத்தப்பட்ட கலைகள், பிறமொழி அலைகளால் தாக் குண்டு பெரும்பாலும் அழிந்தன. தமிழர்தம் சடங்குகள் வடமொழிச் சடங்குகளோடு கலந்து அழிந்தன. இறுதி யாகக் கூறவேண்டுமானால், தமிழர்தம் பழக்க வழக்கங் களும், நாகரிகமும் வடமொழி நீர்மையோடு கலந்து, நாளடைவில் வழக்கற்று அழிந்துபோயின.

இதுகாறும் கூறியவாற்றால், தமிழ் மொழியின் தனிச் சிறப்பு இன்னதென்பதும், வடமொழியின் தன்மை இன்ன தென்பதும், அது தமிழோடு எங்ஙனம் கலந்ததுஎன்பதும், இதனைத் தடுப்பதற்குத் தமிழ்ப் புலவர் பெருமக்கள் செய்த முயற்சி இன்னதென்பதும், வடமொழிக் கலப்பால் ஏற் பட்ட புதிய உரைநடை இன்னதென்பதும், அதனால் தமிழ் மொழிக்கு ஏற்பட்ட தீமைகள் இவை என்பதும் தாமே போதருமன்றோ?

ஆகலின், தமிழராயினர் பிறமொழிச் சொற்களின் துணைவேண்டாது, தூய தனித்தமிழ் நடையினைப் போற்று தல் வேண்டும்; தனித்தமிழ நடையினைக் கையாளுதல் வேண்டும்!

(27—2—63 இதழ் 241-ம் பக்கத்தொடர்ச்சி)

துறைமங்கலம்-
சிவப்பிரகாச அடிகள்

(ஆ. சிவலிங்கனார், மயிலம்.)

புலமை

இலக்கணப்புலமை: நம் அடிகள் துறைமங்கலத்தில் அண்ணாமலை ரெட்டியார் அவர்களைப் பிரிந்து தென்திசை நோக்கித் திருநெல்வேலி யடைந்து தாமிரபருணியாற்றின் கரையிலுள்ள சிந்து பூந்துறையில் இருந்த வெள்ளியம்பல வாணத்தம்பிரானிடம் இலக்கணம் பயின்றவர் என்பதை வரலாற்றால் அறிந்தோம் அத் தம்பிரானை யடையும் முன்பே அடிகள் போதிய இலக்கணப் புலமை நிரம்பியிருந் தவர் என்பதை "குடக்கோடு" என்ற வெண்பாவை யியற் றியமையால் உணர்கிறோம். அதனிடத்து யாப்பிலக்கணம் செவ்வனே பொருந்தியிருத்தலைத் தம்பிரானே வியந்தமை யும் உணர்ந்தோம். அத் தம்பிரானை அடையும் முன்னே திருவண்ணாமலையில் 'சோணசைலமாலை' என்ற நூல் இயற் றியிருப்பதாலும் இவரின் இளமையிலேயே வாய்க்கப் பெற்ற புலமை பெறப்படும். இலக்கணக் கருத்துக்களை இலக்கியத்தில் ஆண்ட புலவர் இவரன்றி வேறெவரும் இலர். தம் முதல் நூலாகியதும் இலக்கணம் பயிலச் செல் வதன் முன்னர் இயற்றியதும் ஆகிய சோண சைலமாலையி லிருந்து ஒரு கருத்து நோக்குவோம்.

"மொழிதரு **கருணைமலை**யெனும் பெயர்**அன்**
மொழியோரீஇ **வேற்றுமைத் தொகையைத்**
தழுவற நின்று வளர்ந்திடும் சோண
சைலனே கைலைநா யகனே" (சோண. 91)

பிரமனும் திருமாலும் சிவபிரானது முடியையும் அடியை

யும் தேடியகாலத்தில் சிவபிரான் ஒளிப்பிழம்பாக நின்றனன் எனவும் அவ்வொளிப் பிழம்பே தற்போது காணப்படும் அண்ணுமலையெனவும் புராணம் கூறும். இதனை மனத்துட் கொண்ட அடிகள் இறைவனைக் 'கருணை மலை' என்று யாவரும் கூறுவதையும் மனத்துட் கொண்டார். இவ்வண்ணுமலை தோன்றுவதற்கு முன்னர் கருணைமலை யென்ருல் கருணையாகிய மலையையுடைய இறைவன் எனப் பொருள்பட்டுப் பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகும். ஆனுல் அண்ணுமலை தோன்றிய பின்னரோ எனின் அன்மொழித் தொகையைப் பயன்படுத்த வேண்டியதில்லை. 'கருணையையுடையமலை' என இரண்டாம் வேற்றுமையுருபும் பொருளும் உடன்தொக்க தொகை என்று கூறலாம். இதனையே நினைந்து "கருணைமலை எனும் பெயர் அன்மொழித் தொகையைவிட்டு வேற்றுமைத் தொகையைத் தழுவுறும் சோண சைவனே" எனக் கூறியுள்ளார்.

இவர் ஐந்திலக்கணப் புலமையும் நிறைந்தவர் என்பது இவரது நூலால் நன்கு புலப்படும். உவமை முதலிய அணி வகைகள் அழகுற அமைத்துப் பாடியுள்ளார். "குடக் கோடு" என்ற பாடலிலேயே "தில்லைத்தோல் மேற்கொள்ளல், ஊருடையான்" என்ற அளவில் நிரல்நிறையணியமைத்தமை காணலாம். இனி இவரால் இயற்றப்பட்ட நூல்களில் காணப்படும் இலக்கணக் கருத்துக்களை மட்டும் காண்போம்.

(1) தலைவன் தலைவியை இயற்கைப் புணர்ச்சியிற் கூடிப் பின் பிரியக் கருதுவான். 'பிரியேன், பிரியின் ஆற்றேன்; என் இடமும் அணித்து' என்றெல்லாம் கூறினுன். அவை கேட்ட தலைவி, அவன் கூற்றைத் தெளிகின்ருள். 'தலைவர் சொல் பிறழமாட்டார்; சொன்ன மொழியை

மாற்றமாட்டார்; பொருள்கோள் வகைகளில் ஒன்றுகச் செய்யுளில் மொழிமாற்றுதலை மேற்கொள்வாரேயல்லாமல் வேறில்லை'' என்று உறுதிகொள்கின்றுள். இக்கருத்துள் பாடல் அடிகள்,

''பழிமாற் றியபுகழ் வேங்கைபு ரேசர் பனிவரைமேல்
மொழிமாற் றெனும்பொருள் கோளின் அல்லாமல் மொழி
பிறழார்''
(திருவேங்கைக் கோவை 29)

இவ்வடிகளில் சிவப்பிரகாசர் மொழிமாற்றுப் பொருள் கோளை ஆண்டுள்ளமை அறிவுக் கின்பம் பயப்பதொன்று கும்.

(2) தலைவனும் தலைவியும் உடன்போக்குப் போயின ராகச் செவிலி அவர்கள் சென்றவழியே சிறிது தூரம் சென்று அவர்கள் காலடிச் சுவடுகள் காணக்கண்டு இரங்கு இன்றுள். தலைவன் வைத்துச் சென்ற கால்சுவட்டின் மேலேயே தலைவியும் தன் காலை வைத்துச் சென்றிருக் கிறுள். இதனைக் கண்ட செவிலி கூறுவது வருமாறு:-

''மலியோ தியினிசை வண்டுபெண் பாடுறும் வஞ்சியடி
கலியோ முனம்செலும் வெள்ளடியோடு கலந்ததுவே''
(திருவே. கோவை 347)

தலைவன் காற்சுவடு பெரியது. தலைவி காற்சுவடு சிறியது. தலைவன் காற்சுவட்டின் மேலேயே தனது காலை வைத்துச் சென்றிருக்கின்றுள் தலைவி. துட்ட விலங்கு முதலியவற்றுக் கஞ்சித் தலைவன் பின்னுலும், முள் பரல் முதலியன காலில் உறுத்துவதற் கஞ்சித் தலைவன் வைத்த இடத்தில் தன் காலை வைத்தும் சென்றிருக்கின்றுள். தலைவன் காற்சுவடு சங்குரேகை யுள்ளதாகப் போதிய அளவாக இருத்தலின்

(வெண்பாவுக்குரிய அளவடியாக) 'வெள்ளடி' என்றும்' தலைவி காற்சுவடு சிறியதாக இருத்தலின் அளவடிக்குக் குறைந்த சீருடையதாகிய 'வஞ்சியடி' என்றும், இரண்டும் கலந்திருத்தலின் வெண்பாவடியும் வஞ்சியடியும் கலக்கும் 'கலியோ' என்றும் கூறுகின்றாள் செவிலி. கலியே என்பதற்குக் 'கெடுதி காரணமோ, கலிப்பாட்டோ' என இரு பொருள் கொள்ளல் வேண்டும். (வெள்ளடி = வெண்பா அடி, சங்குரேகையுள்ளவடி; வெள்ளை =வெண்பா, சங்கு).

(3) தலைமகன் தூது காரணமாகப் பிரிந்தான். தோழி இதனைத் தலைவிக்கு உணர்த்துகின்றாள். "தலைவர் தம்முட் கூடாத இருபெரு வேந்தரைக் கூட்டுவிப்பதற்குச் சென்றிருக்கின்றார்" என்று கூறுகின்றாள். அவ்விடத்துக் கொடுக்கப்பட்ட உவமை அழகைக் காணலாம்.

"சடைநின்ற கங்கையர் வேங்கையி லேயொரு சந்துசென்றார்
படைநின்ற கண்ணிநங் காவலர் இன்றுபற் றுசோன்றுதான்
தோடைநின்ற நேரிசை முன்குற ளுந்தனிச் சோல்லுமுற
இடைநின்று கூட்டுதல் போலிரு வேந்தை
யிசைப்பதற்கே"

(தி. கோ. 414)

நேரிசை வெண்பாவில் இரண்டாம் அடியின் இறுதிச்சீர் முன்வரும் தனிச்சொல்லுடன் பொருந்தாவிடில் அவ்விறுதிச் சீரில் ஒன்றோ அன்றியிரண்டோ அசைகள் சேர்த்துப் பொருத்தப்படுவது இயல்பு அப்படிப் பொருத்துவதற்கு மேற்கொள்ளும் அசையைப் பற்றுசு என்பர் புலவர். "அப்பற்றுசு எப்படி வெண்பாவின் முதற்குறளையும் தனிச்சொல்லையும் சேர்த்துவைக்கின்றதோ அதுபோலத் தலைவர் பொருந்தாத இருபெரு வேந்தரையும் பொருத்தச் சென்றார்" என்று கூறியிருப்பது மிக அழகுடையதாம்.

இதுவரை கூறியவை யாப்பிலக்கணக் குறிப்புக்களாம். இனிப் பிற குறிப்புக்களைக் காண்போம்.

(4) "கடலுலக மேத்தும் கருணைமலை மாயை
நடலை தபுமயிலை ஞானி—விடலரிய
நல்லினத்தை நண்ணு நணுகுமுட லாமுதலார்
மெல்லினத்துள் ஆதிநிலை மேய். (சிவ. கல. 53.)

இடையினமே போல இரண்டறமும் இல்லா
நடையினமே நாமயிலை ஞானி-புடையினமே
சார்வாகா தோடித் தடுமாறு கின்றமையாற்
றீர்வாகா மாயைச் செயல். (சிவ. கல. 25)

இவ்விரண்டு பாக்களிலும் மெல்லினம் இடையினம் என்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டமை காணலாம்.

(5) 'இல்', 'ஈ' என்ற சொற்கள் பெயர்ச் சொற்களாகவும் வினைச் சொற்களாகவும் வரும். அடிகள் அவற்றைப் பயன் படுத்திய இடம் காணலாம்.

"இல்லேன் பதுமொருவர் ஈயென் பதும்வினையாம்
சொல்லென்ப தின்றுபெயர்ச் சொல்லாக—நல்லவளம்
மிக்கெலா நாளும் விழவறு வீதியணி
திக்கெலாம் ஏத்தமலி சேயூரும்" (சிவ. நெஞ். 199)

சேயூரில்ஒருவன்'எனக்கு ஒன்றும்இல்லைஏதேனும்ஈயுங்கள்' என்று கூறுதபடி நல்ல வளம் மிக்குளது என்பதைத் தெரிவிக்கவேண்டி, 'அவ்வூரில் இல் (இல்லை) ஈ (கொடு) என்னும் சொற்கள் வினைச்சொற்களாக இல்லாமல் (வீடு, ஈ) பெயர்ச் சொற்களாகவே அமைந்தன' என்றார் அடிகள்.

(6) விங்குளாபுரியில் மாதரசன் என்ற அந்தணனுக்கு மாதாம் பிகைஎன்ற கற்புடை மனைவி வயிற்றில் சிவபிரான்

ஆணைப்படி நந்தியெம்பெருமான் தோன்றுகிருர். நந்தி பிரான் மாதாம்பிகை வயிற்றிலிருந்து வெளிவருங்கால் சிவபிரான் அக்குழந்தைக்குத் திருநீறிட்டு இலிங்கதாரணமும் செய்து 'வசவன்' என்ற பெயரும் சூட்டினுர், மக்கள் அவ் வசவனைக்கண்டு மனம்மகிழ்ந்தனர் இங்கு நந்திபிரான் தமது விடைவடிவு நீங்கி மக்கள் வடிவினை மேற்கொண்டதற்கும், மக்கள் நந்தியாகிய குழந்தையைக் கண்டு மகிழ்ந்ததற்கும் அடிகள்கொடுக்கும் இலக்கண உவமை மிகச்சிறப்பு வாய்ந்ததாகும். அதன் விளக்கம் காண்பாம்.

கல்+தீது இச்சொற்கள் புணரியல் விதிப்படி 'கஃறீது' என்று மாறுபடும்.

> "தகரம் வரும்வழி ஆய்தம் நிலையலும்
> புகரின் றென்மனுர் புலமை யோரே" (தொல். எழு. 369)

> "லனவென வரூஉம் புள்ளி முன்னர்த்
> தநவென வரிற்ற னவா கும்மே" (தொல். எழு)

என்ற தொல்காப்பியச் சூத்திர விதிகளின்படி அமைந்தது அம்மாறுபாடு இதனுள் வருமொழியின் முதலில் தகரத்தைக்கண்ட நிலைமொழிக் குறில்வழி லகரம் ஆய்தமாகத் திரிந்தது (கஃ+தீது) வருமொழியின் தகரமோ எனின் நிலைமொழி யீற்றிலுள்ள லகரத்தைக் கண்டால் றகரமாகத் திரியக்கூடியது (கல்+றீது) இவ்விரு விதியும் ஒரே காலத்தில் நிகழக்கூடியவையல்ல எனினும் லகரம் ஆய்தமாகத் திரிந்துவிட வருமொழித் தகரம் தனக்கு முன்னர் ஆய்தம் இருப்பினும் அவ்வாய்தம் லகரத்தின் திரிபாகலான் அதனை முன்னை லகரமெய் என்றே கருதித் தான் றகரமாகத் திரிகின்றது இதனையே உவமைப்படுத்தினுர் அடிகள். நந்தி மாதாம்பிகையிடத்துப் பழைய வடிவு மறைத்துத் தோன்றி

னர். தோன்றினும் மக்கள் அவரை மனிதக் குழந்தை என்று எண்ணாது பழைய நந்தி என்றே கொண்டு மகிழ்ந்தார்கள். லகரம் தகரத்தைக் கண்டு ஆய்தமாகத் திரிந்தது போல் நந்தி தமது இருப்பிடத்தைவிட்டு மக்களுடன் சேர வருவதால் அதற்கேற்ப மக்கள் உடம்பை எடுத்தார் என்றும், ஆய்தத்தைக் கண்ட தகரம் அவ்வாய்தம் பழைய லகரமே என எண்ணித் தான் றகரமாகத் திரிதல்போல மக்களும் மக்கட் குழந்தையாக இருப்பவரை குழந்தை என்று கொள்ளாமல் பழைய நந்தி என்று மகிழ்ந்தார்கள் என்றும் உவமையைப் பொருத்திக்கொள்ளுதல் வேண்டும். இக்கருத்தமைந்த பாடலைக் காண்க.

குறில்வழி லகரம் தனிநிலை யாயும்
　　கூடிய தகரம் முன்எழுத் தென்று
அறிகுறி வடிவம் திரிதல்போல் நந்தி
　　யடல்விடை மெய்திரிந் துறினும்
நறுமலர் விழியால் கண்டவ ரெல்லாம்
　　நந்தியே யென்றுளம் மகிழ்ந்தார்
பெறுதவ முயன்ற அன்னையும் பிதாவும்
　　பெறுமுவ கையினையார் உரைப்பார்
(பிரபு. அக். உற். 28)

இச்செய்யுளுக்கு மேற்கூறியவா றன்றிப் பிறவாறும் பொருள்கூறுப. திரு. அ. வரதநஞ்சையா பிள்ளையவர்கள் கூறியதாவது:—

* ஒரு தனிக் குற்றெழுத்தை அடுத்துவரும் லகர ளகரங்களுள் ஒன்று நிலைமொழியீறாக நிற்ப, வருமொழி முதலில் தகர எழுத்துடைய சொல்புணர்ந்து அவ்வழியாக முடியுமாயின் அந்நிலைமொழியீற்றினின்ற லகாரளகாரங்கள்

* வீரசைவம், மலர். 2. இதழ் 10. பக். 197-8

ஓர் ஆய்த எழுத்தாக மாறும் வருமொழி முதலில் நின்ற தகரம் லகர ளகரங்களோடு புணர்வழி யடையும் திரிபுப் படியே றகர டகரங்களாக மாறும் என்பது இலக்கணம். இதனை,

''குறில்வழி லளத்தவ் வணையின் ஆய்தம்
ஆகவும் பெறூஉம் அல்வழி யானே

எனப்போதரும் நன்னூற் சூத்திரத்தால் அறிக. இங்கு ஆசிரியர் இப்புணர்ச்சியை நன்கு கருதி அமைக்கிறார். ஒரு மெய்வேறொரு மெய்யாக மாறுதல்தான் இயல்பு மகரமும் ககரமும் புணரின் ஙகரமும், மகரமும் சகரமும் புணரின் ஞகரமும் ஆதல்போல. இங்ஙனமன்றி முதல் எழுத்துக்களில் ஒன்றாகிய லிகரமெய் சார்பெழுத்தாகிய ஆய்த எழுத்தாக வியப்புறும்படி மாறியது நோக்குவார் இஃது இயற்கையாகிய ஆய்தமோ—புணர்ச்சி வகையால் வந்ததோ? என நுட்பமாக ஆய்ந்து லகரமன்றே யிவ்வாறாக ஆயிற்று; ஆயினும் இது பகுக்கப்படும்போது தன்மெய் காட்டுமே யன்றி இப்போது தோன்றும் ஆய்த உருவைக் காட்டாது என நிச்சயிப்பர். அஃதொப்பவே கடவுட்டன்மையை யுடைய நந்திபிரான் தமது தகைமைக்கு ஒவ்வாத ஒரு மக்கட்பிறவியில் அவதரித்தார் என்றாலும் ஊன்றி ஆராயுங்கால்அவர் நந்தியேதவிர வேறு மனிதருள் (பாசசீவருள்) ஒருவர் அல்லர் என்பது தெற்றென்னும். அவ்வழிச்சந்தியில் தகர முன்னுடைய வருமொழி புணர்க்கப்படுங்காரணத்தால் மயக்காதியின்றி லகரம் ஆய்தமாக மாறினாற் போலவே சிவபெருமானது ஆணைதாங்கி நிலவுலகின் மக்கட்குப் புறச்சமயப் புன்மை போக்கி மெய்ச் சைவசமய மேன்மை தெரித்தற் பொருட்டே அவர்தமக்கு இயல்பல்லாத மானிட உருவத்தோடு பிறந்தார் எனக்கொள்க'' என

அகலவுரை கூறுமாறு இவ் வருஞ்செய்யுள் பொலிந்துநிற்ப தறிக''

இவ்வாறு பிள்ளையவர்கள் அகலவுரை கூறியது நந்தியெம்பெருமான் தமது விடைவடிவு நீங்கி மக்கள் வடிவு பெற்றதற்கேயாம். மக்கள் மகிழ்ச்சிக்கு யாதொரு சிறப்பும் இல்லை. அதனால் கல+தீது என்றவிடத்தில் நிலைமொழியீற்றிலும் வருமொழி முதலிலும் ஆக ஈரிடத்திலும் திரிபுண்மையால் அவற்றுக்குத் தக்கவாறே நந்தியாகிய வசவர். கண்டமக்கள் ஆகிய இருவர்க்கும் பொருந்த அகலவுரை கூறுவதே சிறந்ததாம் அது வருமாறு:—

லகரம் தகரத்துடன் இடைநிலை மயக்கம் கொள்ளாமையாலும், வருமொழித் தகரத்துடன் கூடுங்கால் அதற்கு ஏற்ப வடிவு வேறுபட்டேயாக வேண்டுமாகலானும் ஆய்தமாகத்திரிந்தது. அதுபோல நந்தியானவர் சிவபிரான் ஆணை தாங்கி உலகமக்களை நன்னெறி நிறுத்தி அருள் புரிதற்கு அவர்களிடத்தில் விடைவடிவிற்சேறல் பொருந்தாமையானும், அவர்கள் வடிவிலேயே சேறல் வேண்டுமாகலானும் தமது விடைவடிவு நீங்கி மக்கள் வடிவு கொண்டார். வருமொழித் தகரம் ஆய்தத்துக்கும் தனக்கும் மயக்கத் தொடர்பு இருப்பினும் (அஃது எனக் காண்க) 'கஃறீது' என நில்லாமல் ஆய்தம் லகரத்தின் திரிபுதானே என்று கொண்டு (தன்முன்நிற்கும் ஆய்தத்தை லகரமாகவே நினைத்து) றகரமாகத்திரிந்தது. அதுபோலவே மக்கள்வசவனாகிய குழந்தையைக் கண்ட அளவில் மகிழவேண்டியிருக்கவும் அதற்கு மகிழாமல் அக்குழந்தை நந்தியாம் என்றுணர்ந்து மகிழ்ந்தார்கள் என்று இவ்வாறு அகலம் காண்பது சிறந்ததாம்.

அன்றியும் இவ்வுவமைப் பொருள்களிடத்து ஒருண்மைப் பொருளும் விளங்குதல் காணலாம். "தட்சிணாமூர்த்தி

யின் சின்முத்திரையினை யீண்டு நினைவிற்குக் கொண்டுவருவது நல்லது. சின்முத்திரையின் நிலை, பெருவிரலின் அடியைச் சுட்டுவிரலின் நுனி மடங்கித் தொடுதல்; மற்றைய விரல்கள் தனித்து நிமிர்ந்திருத்தலாம். அதனால் உணர்த்தப்படுவது மும்மலங்களின் நீங்கி உயிரானது இறைவனையடைதல் வேண்டும் என்பது. உயிர்தான் மும்மலங்களை நீக்கி முயன்றுவரினும் இறைவனும் தன்னிலையினின்றும் சற்றுத் தாழ்ந்து அவ்வுயிர்க்குத் துணைபுரிய வேண்டும். சுட்டுவிரல் மடங்கிச் சென்றாலும் பெருவிரலும் சற்று உயர்ந்து அசைந்து கொடுப்பதைக் காணலாம். இதனால் இறைவனையடைய உயிர் முயற்சிக்க வேண்டும் என்பதும், இறைவனும் உயிரை யாட்கொள்ளத் தன் நிலையினின்றும் சற்று இரங்கிவருதல் வேண்டும் என்பதும் போதரும். "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்றார் மாணிக்கவாசகரும். இவ்வுண்மைதான் உவமையால் விளக்கப்பட்ட பொருள்களிடத்திலிருந்து நாம் உணரக் கிடக்கின்றது. உலகினரையாட்கொள்ள வேண்டி நந்தி தமது வடிவு நீங்கி மானிட வடிவு கொண்டார். கண்ட மக்களும் அவரை மானிடராகவே நினையாது நந்தியே என உணர்ந்து மகிழ்ந்தனர். நந்தியாகிய வசவரும் மக்களை யாட்கொண்ட வரலாறும் அறிகிறோம்.' இப்படி அகலம் கொள்ளலாம். இதற்கேற்றவாறு பாடலில் மொழி மாற்றிப் பொருள் கொள்ளலாம்.

''குறில்வழிலகரம் தகரமுன் எழுத்தென்று அறிகுறி வடிவம் தனிநிலையாயும் திரிதல்போல் நந்தியடல் விடை மெய் திரிந்துறினும்'' (எழுத்தென்று = இது லகர எழுத்து என்று. அறிகுறி வடிவம் = அறிதற்குக் குறிக்கப்பட்ட 'ல' என்ற வடிவம். தனிநிலை = ஆய்தம் = கஃ + தீது) எனவும்,

"கூடிய தகரம் குறில்வழி லகரம் தனிநிலையாயும் முன் எழுத்தென்று அறிகுறிவடிவம் திரிதல்போல் நறுமலர் விழி

யாற் கண்டவரெல்லாம் நந்தியே யென்றுள மகிழ்ந்தார்.''
(முன் எழுத்தென்று—தற்போது ஆய்தமாக இருப்பினும் இது லகர எழுத்தேயாம் என்று எண்ணி, அறிகுறிவடிவம் திரிதல்—தன்னை யறிதற்குக் குறிக்கப்பட்ட 'த்' வடிவம்''ற்'' எனத்திரிதல். கஃ + றீது)

எனவும் மொழி மாற்றிக்கொள்க

(7) இனி அடிகள் அருத்தாபத்தி என்பதை ஆண்ட இடம் ஒன்று காணலாம்.

அருத்தாபத்தி இரண்டு வகைப்படும், காட்சி, கேள்வி என. ஒருவன் முகக்குறிப்பைக்கண்டு அவன் உள்ளத்தில் இருப்பதை யுணர்வது. அருத்தாபத்தியால் உணர்வது எனப்படும். இது காட்சி அருத்தாபத்தி உண்ணுவிரதி என்று தன்னைச் சொல்லிக்கொள்பவனைக் கண்ட விடத்து அவன் நல்ல உடற்கட்டோடு இருப்பானாயின் அவன் மறைந்துண்டு வருகிறான் என்று உணர்வதும்காட்சி அருத்தாபத்தியாம் ஒருவன் சொன்ன சொன்ன சொல்லைக் அவனால் சொல்லப்படாத ஒன்றையும் உய்த்துணர்வது கேள்வியருத்தாபத்தி எனப்படும். இரண்டிடங்களில் பயின்றுவரும் ஒருவனைப் பற்றி ஓரிடத்திற் சென்று ''ஈண்டு உளனோ அவன்?'' என வினவியவழி, 'ஈண்டில்லை' என்றால், ஆண்டு உளன் என்று எண்ணுவது போல்வது கேள்விய ருத்தாபத்தியாம். இவ்விரண்டனுள் அடிகள் காட்சி அருத்தாபத்தியால் ஒரு பொருளை விளக்கியவாறு காணலாம்.

அல்லமதேவன்மீது கொண்ட காதல் காரணமாக மாயை என்பவள் வடிவம் வேறுபட்டாள் தோழிமார்கள் மாயையை நோக்கி, இவ்வாறு வேறுபடக்காரணம் என்னை? என்று வினவினர். அதற்கு அருகிலிருந்த

விலாசினி என்பவள் அல்லமதேவனிடம் இவள் காதல் கொண்டுள்ளாள்' என்ற அளவில் மாயை அவள் சொல்லை மறுக்கமாட்டாது. வாயின் இளவெண்ண தோன்ற வாளா இருந்தாள். அது கண்ட தோழிகள், 'இவளுக்கு அல்லம தேவனிடம் மயல் உண்டு' என உணர்ந்தனர். இதனைத்தான் அடிகள் அருத்தாபத்தியால் உணர்ந்தனர் என்றார். விலாசினி கூறியதை மாயை மறுக்காமல் விட்டதோடன்றி நகையும் தோன்ற இருத்தலின் அவளைக் கண்ட அளவில் அவளது மனக்கருத்து வெளிப்பட்டதனால் அதாவது தோன்றியது கொண்டு கண்ணுக்குத் தோன்றாத ஒன்றை உணர்ந்ததனால் (காட்சி) அருத்தாபத்தியினால் உணர்ந்தனர் என்றார். அவர் கூறியது.

"........................தோகைதான்
வாயின் இளவெண் ணகை தோன்ற
வாளா இருப்பக் கண்டுமயல்
ஆயின் உடையாள் எனமாதர்
அறிந்தார் அருத்தா பத்தியினால்" (பிரபு. பிரபு. 37)

என்பது.

தருக்க நூற்புலமை:— தருக்கநூற் புலமையிற் சிறந்தவர் அடிகள் என்பதற்கு அவர் கன்னடத்திலிருந்து "தர்க்கரிபாஷை" யைத் தமிழில் மொழிபெயர்த்தமையே சான்று பகரும். தம் பிறநூல்களிலும் தர்க்கக் கருத்துக்களைப் பெய்து சென்றிருக்கிறார்கள். ஒரு கருத்தை இங்குக் காண்போம்,

"மாயை யிடையை யுளள் முலையால்
மற்றை மாதர் போலென்று
தூய மதிஞர் அனுமித்துச்
சொல்வும் மருங்குல் தோகைதான்"

(தொடரும்)

மதிப்புரை

மோகனவாணி

[ஆசிரியர்: ஹா. கி. வாலம், பீ. ஏ. கிடைக்குமிடம் 11.''கொலாபா சேம்பர்ஸ்''கொலாபா பம்பாய்-5. விலை. 3-25. பக்கங்கள் 176]

கண்ணன் உரைத்த கருத்தின் சாரமே
திண்ணிய கீதை நுண்பொருள் ஆகும்!
எண்ணும் நினைப்பில் எழுத்துடன் வந்தே
கண்ணன் சிரிப்பான்! கருத்துள் இனிப்பான்.
மோகனக் கண்ணனின் வேதமாம் வாக்கை
'மோகன வாணியாய்' முழுமுதற் றமிழில்
இனிமை எளிமை இழுமெனும் நடையில்
தனித்தனித் தலைப்பில் தக்கவா றமைத்தே
தந்துளார் 'வாலம்'! தகுதியும் கொண்டார்!
இந்த, நூலினை இசையுடன் படித்தால்
கண்ணனின் இசையில் கருத்தினை இழந்த
மண்ணவர் போல மகிழ்ச்சி கொள்வரே!

* * *

திருமந்திரக் கட்டுரை (தியானம்-சமாதி-அட்டாங்கயோகப்பேறு)

[வெளியீடு: திருவாவடுதுறை ஆதீனம் பக்கங்கள் 298]

திருமந்திரத்தின் செம்மைப் பொருளையும் உண்மைப் பொருளையும் யாவரும் அறிந்து கொள்ளுதல் வேண்டும் இம்மைப் பிறப்பிலும் மறுமைப் பிறப்பிலும் இந்நூலினைக்கற்றொழுகுவார் வீடுபேறென்றும் தேடுதற்கரிய சித்தியினைப் பெற்றுய்வர். திருமூலர் என்னும் அருந்தவத்தோரால் ஆக்கப் பட்ட இத்திருமந்திரம் எல்லோரும் இன்புற்றிருக்கவேண்டும் என்றும், இங்க மாராய்த் திகழவேண்டும் என்னும் பெருநோக்குடனும் அருளப்பட்ட ஒன்றா கும் யாவரும் படித்துணரும் பொருட்டு எளிய இனிய தமிழ்நடையில் இந்நூல் வடித்துத் தாப்பட்டுள்ளது. திருவாவடு துறை ஆதீனத்தார் செய்யும் சமயத் தொண்டுக்குச் சமயஉலகம் மட்டுமல்ல தமிழுலகும் பெரிதும் கடமைப் கட்டிருக் கிறது. ஆங்கிலமேற்கோள்களும் விளக்கவுரைகளும் நூலினுள் தோய்வதற் குத் துணைபுரிகின்ன, படித்தின்புறுக.

புலவர்: மு. உலகாநதன்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

I. சங்க வெளியீடு

			ரூ.	அ	ப
4.	வைத்தியசாரசங்கிரகம்	—	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	—	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றும் பாகம்	—	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	—	1	12	0
11.	திருவருணைக் கலம்பகம்	—	0	6	0
13.	கல்லைச்சிலேடை வெண்பா	—	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	—	0	4	0
16.	ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சனம்	—	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (தொகுப்பு)	—	0	4	0

II. செந்தமிழ் வெளியீடு

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	—	0	4	0
2.	கணுநூல் (5) இனியது நாற்பது (உரை)	—	0	3	0
4.	புலவராற்றுப்படை	—	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	—	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	—	0	8	0
9.	அநுமான விளக்கம்	—	0	10	0
10.	அட்டாக யோகக்குறள்	—	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	—	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	—	0	4	0
14.	முத்தொள்ளாயிரச் செய்யுட்கள்	—	0	3	0
16.	திருவாரூருலா	—	0	8	0
17.	சுகசந்தர்சன தீபிகை	—	0	12	0
18.	இயற்கைப் பொருட்பாடம்	—	0	4	0
19.	தேவையுலா	—	0	3	0
21.	சிதம்பரப் பாட்டியல் (உரையுடன்)	—	0	8	0
22.	திருக்கலம்பக மூலமும் உரையும்	—	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	—	0	8	0
24.	குருமொழி வினு விடை	—	0	1	0
25.	கேசவப் பெருமாள் இரட்டைமணிமாலை	—	0	2	0
26.	திருத்தணிகை திருவிருத்தம்	—	0	1	0
27.	மதுரைத் திருப்பணிமாலை	—	0	8	0
30.	ஞானுமிர்தக் கட்டளை	—	0	3	0
32.	மநீஷாபஞ்சகம்	—	0	8	0
33.	உவமான சங்கிரகம்	—	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	—	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	—	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ் —	0	8
41.	பொருட்டொகை நிகண்டு —	0	6
42.	அகராதி நிகண்டு —	0	12
43.	மேகவிடு தூது —	0	2
44.	திருக்குற்றாலமாலை —	0	2
45.	தண்டலையார் சதகம் —	0	4
46.	இராமோதந்தம் —	0	3
47.	பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100)	1	0
48.	சேதுநாடும் தமிழும் —	0	6
49.	கூடற்புராணம் —	0	10
50.	திருவள்ளுவர் (ஆங்கிலம்) —	0	6
51.	அரும்பொருள் விளக்க நிகண்டு —	1	4
52.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் —	0	12
53.	பாப்பாவினம் —	0	10
54.	மதுரை மும்மணிக்கோவை —	0	5
55.	பழனிப் பிள்ளைத்தமிழ் —	0	3
56.	கடம்பர் கோயில் உலா —	0	6
57.	சங்கரநயினார்கோயில் அந்தாதி —	0	6
58.	கலைசைக்கோவை —	0	12
59.	பெருந்தொகை —	5	0
60.	சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை —	0	5
61.	சிராமலைக்கோவை —	0	12
62.	மத்யவியாயோகம் —	0	2
63.	அமிர்தரஞ்ஜநி —	0	2
64.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் —	0	8
65.	திருச்சிறுபுலியூருலா —	0	12
66.	துணைத்தலைவர் நினைவுமலர் —	0	10
67.	மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர் —	2	0

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4 - 50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 59 தொகுதிகள் நிறைவாகியிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட்பகுதிகள் உள்ள பைண்டுசெய்யாத தொகுதி 1 ரூ. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.
2. சங்கப் பதிப்பு புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற் பட்டும் வாங்குவோர்கட்கு ரூபாய் ஒன்றுக்கு 3 காசு வீதம் கழிவு தள்ளிக் கொடுக்கப்படும்.

இவ்விதழ், மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள். திரு. பி. டி. இராசன் (B. A. Bar-at-law.) அவர்களால் மதுரை விவேகாநந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.